

# கீதாசார்யன்-39

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



தொகுதி 4 | துர்மதி ௵ | மார்கழி ௴ | டிசம்பர் 81 | பகுதி 3



ஆசிரியர்:

M. A. வேங்கட கிருஷ்ணன், M.A., M.Phil.

**இயக்குநர் குழு:**

T. C. A. ராமானுஜம்
M.A., B.L., I.R.S. (தலைவர்)
N. கணபதி
விற்பனை இயக்குநர்
R. ரவிச்சந்திரன்
பொதுத்தொடர்பு இயக்குநர்
P. T ஸ்ரீனிவாசன்
நிர்வாக இயக்குநர்

**ஆலோசகர் குழு:**

சாண்டில்யன் (தலைவர்)
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
Dr. V. V ராமானுஜம்
S. வேங்கடகிருஷ்ண
பட்டாச்சாரியார்
K. E. B. ரங்கராஜன்

7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை-600 005.

★

தனி இதழ் விலை
ஒரு ரூபாய்
வருடச்சந்தா ரூ. 12/-

# ஸ்ரீமத்பகவத்கீதை

## (இரண்டாம் அத்தியாயம்)

**ஜாதஸ்யஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம்ஜன்ம ம்ருதஸ்ய ச**
**தஸ்மாதபரிஹார்யேர்த்தே ந த்வம் சோசிதுமர்ஹஸி (27)**

உண்டானதற்கு அழிவு தவிர்க்கப் படாததாம் என்பது பிரசித்தம்; அப்படியே அழிந்ததற்கும் உண்டாதல் தவிர்க் கப்படாததாம்; ஆதலால் தவிர்க்கப்படாத விஷயத்தில் நீ வருந்துதற்கு உரியனல்லை' என்பது பொருள்.

“ஹி” என்பது பிரசித்தியைக் குறிக்கின்றது; பிரமாணப் பிரசித்தியாகும்; த்ருவம் என்பதற்கு தவிர்க்கப் படாதது என்று பொருள். உலகத்தில் இல்லாத ஒரு பொருளுக்கே உத்பத்தி காணப்படுகிறது; உண்டாகி அழிந்த பொருளுக்கு உத்பத்தி காணப்படவில்லை; அவ்வாறிருக்க அழிந்ததற்கு உத்பத்தி ஏற்படுமா? என்ற ஐயம் எழலாம். விநாசங்கள் என்பன உளதான பொருளுக்கு நேரும் நிலை வேறுபாடுகளே. முன்னுள்ள நிலையை விட்டு வேற்று நிலை யை அடைந்தால் அப்பொருள் அழிந்தது என்றும் உண்டா யிற்று என்றும் கூறப்படுகிறது. மண்ணாயிருப்பது உண்டை யாகிறது. குடமாகிறது ஓடாகிறது பொடியாகிறது இதைப் போலவே எல்லாப் பொருள்களுக்கும் நிலைவேறுபாடுகள் காணப்படுகின்றன; இவ்வேறுபாடுகள் தவிர்க்கப்படாதன வாகும். ஆதலால் நீ இதைப் பற்றிவருந்த உரியனல்லை என்பது கருத்து.

# திருநெடுந்தாண்டகம்

மாதங்களுள் மார்கழியாகிறேன் என்கிறான் கீதாசாரியன். அப்படிப்பட்ட ஸத்வ மாதத்தில் பரமாத்மா விரும்பும் மொழியும் தமிழே. திருவரங்கம், திருமலை ஆகிய கோவில்களில் இன்றளவும், ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள ஸுப்ரபாதம் மார்கழிமாதத்தில் அறவே நிறுத்தப்பட்டு, செவிக்கினிய செந்தமிழாலான திருப்பள்ளியெழுச்சி பாடியே விடியற்காலையில் கோவில் திறக்கப் படுகிறது. மேலும் உபனிடதம், புருஷஸூக்தம் ஓதாமல் திருப்பாவை முப்பதும் இசையுடன் பாடி முதல் பூஜையும் நடத்தப்படுகிறது. அதோடு நில்லாமல் எல்லா விஷ்ணு கோவில்களிலும் திரு

ஸ்ரீரங்கம் குண்டலம் R. திருமலாசாரியர்

அத்யயன உத்சவம் என இருபத்தொரு நாட்கள் விசேஷமாய்க் கொண்டாடப்படுகிறது இந்தத் திருவிழா மற்ற ஆலயங்களிற் காட்டில் தனி முதற்சிறப்புடன் திருவரங்கத்தில் நடைபெறுவதை இன்றும் கண்டு மகிழலாம் வைகுண்ட ஏகாதசி முதல் பத்து நாட்களில் ஸம்ஸ்க்ருத வேதமும் பாராயணம் செய்யப் பட்டுவந்தாலும், அதற்கு முன்னும் பின்னும் பத்து நாட்கள் நாலாயிரதிவ்ய ப்ரபந்தம் என்கிற செந்தமிழ் மறை இசை, நடனம், உரையுடன் அரங்கன்முன் நடைபெறுகிறது. மேலும் இத்திருவிழா ஆரம்பிக்கும்முன் ‘‘திருநெடுந் தாண்டகம்’’ என்ற தமிழ் பிரபந்தம் திருவரங்கத்தில் மட்டும் இசை, உரை, நடனத்துடன் விசேடமாய் பாடப்பட்டு வருகிறது. உத்சவபிரகடனப் பத்திரிகையிலும், பஞ்சாங்கங்களிலும், ஸ்ரீரங்கம் திருநெடுந்தாண்டகம் என்று விசேஷமாய் பிரகடனப்படுத்தியுள்ளதையும் காணலாம். மேலும் மார்கழிமாத முதல் சித்திரைமாத முடிய 5 பெரிய திருவிழாக்கள் நடத்தி சித்ராபௌர்ணமி

யன்று திருநெடுந்தாண்டகத்தை இசையுடன் அரங்கன்முன் பாடி விசேஷ திருவிழாக்களின் முடிவை அறிவிக்கின்றனர. இவ்வளவு விசேடச்சிறப்பு இந்தப் பாடல்களுக்கு ஏன் என்பதை சற்று மகிழ்வுடன் பார்ப்போம்.

திருமாலைப் பாடும் ஆழ்வார்களுள் கடைசியில் பிறந்தவர் திருமங்கையாழ்வார். இவர் ஆறு பிரபந்தங்களில் ஆயிரத்துக்கும் மேலான தமிழ் பாடல்கள் இயற்றியுள்ளார். பாரத நாடெங்கும் நடந்தே சென்று ஆங்காங்கே உள்ள வைணவத்தலங்களை தரிசித்து பாடல்களை இயற்றியவராவார். யாவரும் அறியும் வண்ணம், அத்தலங்கள், அவற்றில் வாழும் மக்கள், விஷ்ணுவின் பெருமைகளை கூறுவதுடன் வேதாந்தக் கருத்துக்களையும் விரிவாயும் சுருக்கமாயும் தெரிவித்துள்ளார். அவர் "இயற்றிய பிரபந்தங்களில் கடைசியானது திருநெடுந்தாண்டகம் எனப்படும்.

கடவுளும், ஜீவாத்மாக்களுக்கும், மற்ற பதார்த்தங்களும் உண்மை என்ற முடிவு வேதங்களில் கூறப்பட்டுளளன. கடவுளும், ஆத்மாக்களும் நிலையானவை. ஆனால் உலகமும் மற்றும் உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் நிலையற்றவை—ஒருகாலத்தில் தோன்றி, சிறிதோ அல்லது நெடுகிய காலமோ இருந்து ஒரு காலத்தில் மறைபவை—என்றும் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒரு சாரர் கடவுளை (ப்ரஹ்மம்) ஒருவரே உண்மைப் பொருளாகினும் உருவற்றது என்றும், ஜீவாத்மாக்களும் கடவுளும் ஐக்யம் என்றும், உலகு, மற்றும் அதனுள் காணும் பொருள்கள் யாவும் பொய்த் தோற்றம்தானே தவிர உண்மையில் இல்லை என்றே பிரசாரம் செய்ய முயன்றனர். ஜகத்மித்யை என்கின்றனர். பொய்யான உலகுக்கும், அதனுள் பொருள்களுக்கும் பொய்யான உடல் பெற்றோர். நீதி, நேர்மை, சரி, தவறு, உயர்வு—தாழ்வு முதலிய வேற்றுமைகளையும்

அதை அறிவிக்கும் நூல்களையும் விவாதிக்கத் தவறுவதில்லை. வெறும் ஸம்ஸ்க்ருத பாஷையை பலவிதமாகப் பொருள் செய்து புத்தி மோஹத்தை உண்டாக்கிப் பெயர் பெறுகிறார்கள். இந்த பொய்யான கருத்தை பொய்யாக்கி, காணும் உலகமும் அதனுட் பொருள்களும் நிலையற்றவை யானாலும் காணும் நிலையில் உண்மையாகவே உள்ளன; ஆத்மாக்கள் பலவும் நிலையான உண்மை. இவையிரண்டையும் இயக்கும் முழுமுதற் கடவுள் நிலையானவன், அழகான உருவத்துடன் நிறைந்த கல்யாண குணங்களுள்ளவன் என்ற கருத்தை மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

தேசாந்தரங்களில் ஒரு வாக்கியம் போன்று, மற்றொரு வாக்கியம் காரணகாரியங்களைக் கூறும்பல், முரண்பாடு தோன்ற வேறுவேறு பொருளைக் காரண காரியமாய்க் கூறியிருப்பதைக் காணலாம். அவைகளை மேலெழப்பார்ப்பாருக்கு முடிவான பொருள் கூறுவதில் சங்கை உண்டாகக் கூடியதே. ஊன்றி நோக்கி, சில முறைகளைக் கைக்கொண்டு அலசித்தால் உண்மை விளங்கும். இப்படிப்பட்ட சிரமங்கள் இல்லாமல் சுலபமாக யாவரும் அறியும் வண்ணம் வேதாந்தத்தை திருநெடுந்தாண்டகத்தில் ஆழ்வார் கொடுத்திருக்கிறார். ப்ரக்ருதியினாலான உடல் உண்மை; ஜீவன் அதில் இருக்கிறான். உடலுக்குண்டான குணங்களும் அதனால் ஏற்படும் சுக துக்கங்களும் உண்மையே. அதை ஜீவன் அநுபவிக்கிறான். இதனடியாக ஜீவனுக்குப் பற்பல பிறவிகள் உண்டாகின்றன என்பது உண்மை. ஆகையால் (1) ப்ரக்ருதியும் அதனைச்சார்ந்தவைகளும் நிலையற்றவை (2) ப்ருக்ருதியுடன் கூடியிருத்தலாலே ஸுகதுக்கங்களை ஜீவன் அநுபவிப்பதாலே, ஸுகதுக்கங்கள் ஜீவனின் குணங்கள் அல்ல. (3) ஜீவனுக்கு ஜனன மரணமில்லை. ஜீவன் அடைந்துள்ள சரீரத்திற்குத்தான் உத்பத்திவிநாசமுண்டு. அதைத்தான் ஜனன மரணம் என்கிறோம். (4) ஜீவனுக்கு ஜனன மரணம் இல்லை. ஆனால் ஜீவன் பரமாத்ம ஸம்பந்தத்தை எந்த

நொடியில் உணர்வில்லையோ அவ்வமயம் மரண மடைந்தது போலவே கருதப்படுகிறான். இதை சற்று விளக்குவோம். ஜீவனுக்கு மரணமில்லாதுபோனாலும், உலகில் ஒன்றுக்கும் பயனில்லாத மனிதனை உயிருடன் இருக்கச் செய்தே நடை பிணம் என்று கருதுவதுபோல், பரமாத்மாவின் ஸம்பந்த மின்றி ஜீவன் ஸுகித்திருப்பதை (கைவல்யத்தையும்) மரணம் என்னலாம் (5) பரமாத்மாவாகிய கடவுள் ஸ்ரீமந் நாராயணன் எல்லாகுணங்களுக்கும் இருப்பிடமாய் அவனி டம் ஆசையுள்ளோர்க்கு தன்னை தன் பேருகக் காட்டிக் கொடுக்கிறான் என்ற உண்மைகளை 30. பாட்டுகளில் தெரி விக்கிறார். "செந்திறந்த தமிழோசை வடசொல்லாகி" என்று தமிழ் நாட்டுக்கு தமிழ்வேதம், ஸம்ஸ்க்ருத வேதம் இரண்டும் ஸமமாகப் பரவியுள்ள பெருமையினால் மற்றவை களைவிட உயர்ந்த பண்பாடுடன் வேதாந்தக்கருத்துக்களை நிலைநாட்டிய பெருமையை அளிக்கிறார்.

ஆக இந்த பிரபந்தத்தின் துணைகொண்டு ஒரு காலத்தில் பட்டர் என்ற மஹான் வேதாந்திகளை வாதத்தில் வென்று ஸ்ரீவைஷ்ணவர்களாகத் திருத்தியுள்ளார் என்று சரித்திரத் தில் காண்கிறோம். அப்படி வைணவத்தின் மேன்மையை உலகுக்கு உபதேசித்த நன்னாளே திருநெடுந்தாண்டகத் திரு நாள் என்று திருவரங்கத்தில் கொண்டாடப்பட்டு வரு கிறது. அந்நாளில் இப்பிரபந்தம் இசை, இயல், நாட்டியத் துடன் ஸேவிக்கப்படுகிறது.

ஸ்ரீரங்கம் ஸ்வயம் வ்யக்த ஸ்தலங்களில் முதன்மையாக வும் அர்ச்சாஸ்தலங்களுக்கு வேர் பற்றாகையாலும் அதை ஸ்ரீவைகுண்டமாகவே போற்றுவர். பூலோக வைகுண்ட மெனவும் வழங்குகிறோம். ஆக ஸ்ரீரங்கத்தில் இத்திருவிழா நடப்பதால் ஸ்ரீ வைஷ்ணவ உலகத்துக்கே பெருமையையும் பொலிவையும் அளித்து வருகிறது. இத்தகைய பெருமை யுடையது திருநெடுந்தாண்டக திவ்யப்ரபந்தம்.

# கூனைச் சிதைத்த கோவிந்தன்

வளவேழுலகு திருவாய் மொழியில் "கூனே சிதைய உண்டைவில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா!" என்று ஆழ்வார் அருளிச் செய்துள்ளார். இது கிருஷ்ணாவதாரத்தில் உள்ள கூனியைக் குறித்ததா? அல்லது இராமாவதாரத்திலுள்ள கூனியைக் குறித்ததா? என்ற ஐயத்தில் இரண்டு கூனிகளையும் குறிப்பதாகும் என்று இரண்டு நிர்வாஹங்களைக் காட்டியிருக்கிறார்கள் ஆசார்யர்கள்:

**R. வேங்கடராமாநுஜன்**

கிருஷ்ணன் மதுரைக்கு எழுந்தருளும் பொழுது ஒரு கூனியைக் கண்டான். அவள் ஒரு தட்டிலே சந்தனத்தை எடுத்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தாள். அவளைப் பார்த்து "எங்களுக்குச் சந்தனம் கொடு" என்றான் கண்ணபிரான்: அவள் மறுக்க முடியாமல் சிலவற்றைக் கொடுத்தாள்: அவை மட்டரகமாயிருந்தன; அவற்றை வேண்டாமென்று கூறிவிட்டான்; அவன் தன்னுடைய மகிழ்ச்சி தோன்றவிருந்தான்; அவனுடைய மகிழ்ச்சியைக் கண்டு "சிறந்த அழகிய முகத்தையுடையவளே! எமக்கும் அண்ணருக்கும் தகுந்தாற் போல் மணமுடைய சந்தனத்தை அன்புடன் கொடு என்றான்: கம்சனுக்குக் கொண்டுபோகிற சந்தனமாயிற்றே! அவன் தண்டிக்கில் செய்வதென்? என்ற அச்சமில்லாமல் பிள்ளைகளுடைய அழகையும் பேச்சின் இனிமையையும் கண்டு மகிழ்ந்தாள்; நல்ல மணமுடைய சந்தனத்தையெடுத்து அன்பு தோன்றும்படி தன்னுடைய கைகளைக்

அவர்களுடைய திருவுடம்புகளில் பூசினாள்; இங்ஙனம், பயன் கருதாமல் அன்புடன் பூசிய செயலைக் கண்டு மகிழ்ந்து, அவளுடைய கூனை நிமிர்த்தருளினான் கண்ணபிரான்; இதனைப் பெரியாழ்வார் தெரிவிக்கும் பொழுது

''நாறிய சாந்தம் நமக்கிறை நல்கென்ன,
தேறி யவளும் திருவுடம்பில் பூச
வூறிய கூனினை உள்ளே யொடுங்க, அன்
றேற வுருவினாய் அச்சோவச்சோ
எம்பெருமான் வாராய் அச்சோவச்சோ''

என்று யசோதைப் பிராட்டியின் பாவனையில் பாடியிருக்கிறார். இதனை உட்கொண்டு ''கூனே சிதைய உண்டை வில் நிறத்தில் தெறித்தாய்'' என்பதற்குச் சாந்து கொடுத்த கூனியின் கூனை நிமிர்த்த செயலாக முதலில் பொருள் கொண்டனர் பெரியவாச்சான் பிள்ளை; கூனே சிதைய— கூன் மாத்திரம் அழியும்படி, உண்டை வில் நிறத்தில்—கண்டு வில்லை நிமர்ப்பது போல (நிறம்—போல) தெறித்தாய்— நிமிர்த்தாய். தெறித்தல் என்பது தொழிலை உணர்த்தி அவ்வழியாலே நிமிர்த்தலைக் காட்டுகின்றது. கோவிந்தா— பசுக்களோடு பொருந்தியுள்ளவனே! என்று பொருளாகிறது. கூனியினுடைய கூனைப் பார்த்து வெறுக்காமல் அவன்பால் அன்பு செய்து அவளுடைய கூனைப் போக்கினது போல, தன்னைப் பற்றினருடைய குற்றங்களைப் பார்க்காமல் அவர்களைக் கைக்கொண்டு அவர்களுடைய குற்றங்களைப் போக்கக் கூடியவன் என்பதும், தாழ்ந்தாரோடுங் கலக்குந் தன்மையுள்ளவன் என்பதும் இதனால் வெளிப்படுகின்றன காணலாம். இப்படிப்பொருள் கொள்ளுவதில் சொற்களுக்கு நெருக்கிப் பொருள் கொள்ள வேண்டிய அருமைப்பாடு காணப்படுகிறது; ஆதலால் இரண்டாவதாகப் பொருள் கூறியிருக்கிறார். இவரைப் போலவே பிள்ளான் தவிர

(தொடர்ச்சி 41ம் பக்கம் பார்க்க)

# தொண்டரடிப் பொடியாழ்வார்

**கண்ணன் :** இந்த மாதம் ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையைப் பற்றிக் கூறப் போகிறீர்களா தாத்தா?

**தாத்தா :** இல்லை. நீங்கள் திருப்பாவையைப் பற்றிக் கேட்க வேண்டுமானால், இந்த மாதம் பற்பல இடங்களில் பெரிய பெரிய வித்வான்கள் சொல்லும் காலக்ஷேபங்களுக்குச் சென்று கேளுங்கள். இன்று உங்களுக்கு இந்த மாதம் அவதரித்த தொண்டரடிப் பொடியாழ்வாரைப் பற்றித் தான் கூறப் போகிறேன்.

பூமிகா

**நாராயணன் :** நல்லது தாத்தா. நீங்கள் சொன்னபடியே நாங்கள் திருப்பாவையை வானொலியிலும், காலக்ஷேபங்களுக்குச் சென்றும் கேட்டுக் கொள்கிறோம்.

**தாத்தா :** தொண்டரடிப்பொடியாழ்வாருடைய தாய் தந்தையர் இவருக்கு இட்டபெயர் விப்ர நாராயணன்தான். இவர் மார்கழி மாதத்தில், கேட்டை நக்ஷத்திரத்திலே புள்ளம் பூதங்குடிக்கு அருகிலுள்ள மண்டங்குடியில் ஸ்ரீ வைஷ்ணவ குலத்திலே அவதரித்தவர். இவர் இளமையிலேயே எல்லா சாஸ்த்ரங்களையும் கற்றார். இவர் பிரம்மசாரியாகவே இருக்க முடிவு செய்து திருவரங்கத்துக்கு எழுந்தருளினார்.

**ஸ்ரீதேவி :** அப்படியானால் அவர் கடைசிவரை கல்யாணம் செய்து கொள்ளாமலேயே இருந்தாரா தாத்தா?

**தாத்தா :** கதையை முழுவதும் கேள் புரியும். இவர் புண்டரீக மஹரிஷியைப் போலவும், க்ருஷ்ணாவதாரத்தில் மாலாகாரரைப் போலவும், பெரியாழ்வாரைப் போலவும் திருத்துழாய் மாலையும் செண்பக மல்லிகையோடு செங்கழு நீர் இருவாட்சி எண்பகர் பூவும் தொடுத்துக் கொண்டு பெரிய பெருமானுக்கு ஸமர்ப்பித்து வாழ்ந்து வந்தார். இவ்வாறு இருக்கையில், தேவதேவி என்னும் தாசி தனது தமக்கையோடும், தோழியோடும் விப்ரநாராயணரின் பூம் பொழிலில் வந்து அமர்ந்து கொண்டிருந்தாள்.

**கண்ணன் :** அவள் எதற்காக அந்த ஊருக்கு வந்தாள்? எதற்காக அவருடைய நந்தவனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் தாத்தா?

**தாத்தா :** அவள் சோழ அரசன் முன்னிலையில் ஆடல் பாடல்களை நிகழ்த்தி ஏராளமான பரிசுகளைப் பெற்றுத் திரும்பி வரும்போது நந்தவனத்தின் அழகில் ஈடுபட்டு அங்கே வந்து அமர்ந்து கொண்டிருந்தாள். அப்போது பூக் கொய்வதற்காக வந்த விப்ரநாராயணர் அவர்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. தேவதேவி தனது தமக்கையிடம் 'இவன் அலியோ? பித்தனோ? நம்மைக் கண்டு அனைவருமே மயங்கிக் கிடக்கும்போது இவன் மட்டும் நம்மை ஏறெடுத்தும் பார்க்காமல் இருக்கிறானே' என்று வினவினாள். தமக்கையும் ''பெருமாளிடம் அளவற்ற பற்றுக் கொண்டுள்ள இந்த ப்ரம்மசாரியை நீ மயக்கி விட்டாயானால் நான் உனக்கு ஆறு மாதம் அடிமையாக இருக்கிறேன்' என்று சபதம் செய்தாள். அந்த சபதத்தை ஏற்றுக் கொண்டு

தேவதேவியும் நகைகளை கழற்றிக் கொடுத்து அவர்களை அனுப்பி விட்டு எளிமையான கோலத்துடன் சென்று விப்ர நாராயணரின் கால்களில் விழுந்து வணங்கினாள்.

**நாராயணன் :** தேவதேவி அவரை மயக்கி விட்டாளா? அவளுடைய சபதத்தை நிறைவேற்றி விட்டாளா தாத்தா?

**தாத்தா :** இரு அவசரப்படாதே, மீதியையும் கேள். அவர் காலில் விழுந்தவுடன் 'நீ யார்? எனக் கேட்க, அவளும் 'ஸ்வாமி! முன்வினைப் பயனாலே தாசி குலத்தில் பிறந்தவள் நான். என்னுடைய தாயார் என்னைக் குலத் தொழில் செய்ய நிர்ப்பந்தப் படுத்தினாள். பல பாவங்கள் செய்து இக் குலத்தில் பிறந்ததும் அல்லாமல் மேன்மேலும் பாவங்களைச் செய்து படுகுழியில் விழ வேணுமோ? எனவே என் தாயை நிராகரித்து விட்டு, பெருமாளுக்குச் சேவை செய்யும் உங்களை நாடி வந்தேன். வேறு புகலற்ற என்னை ஆதரித்து, நந்தவனத்தை காக்கும் கைங்கர்யத்தை அருளினால், தாங்கள் மாலை ஸமர்ப்பிக்க கோவிலுக்குச் செல்லும்போதும், பிக்ஷைக்குச் செல்லும் போதும் நந்த வனத்தை காத்து நிற்பேன்' என்று வேண்டினாள். விப்ர நாராயணரும் அவளுடைய உருக்கமான வார்த்தைகளை நம்பி, புகலிடம் கொடுத்தார்.

**ஸ்ரீதேவி :** அச்சச்சோ? அப்படியானால் அவள் அவரிடமே தங்கி விட்டாளா தாத்தா?

**தாத்தா :** இல்லை. அவள் பாத்திகட்டுதல், நீர் வார்த்தல் போன்ற காரியங்களைச் செய்து கொண்டு இருந்தாள். ஒருநாள் பலத்தமழை காரணமாக, விப்ர நாராயணர் உள்ளே உட்கார்ந்திருக்க, அவள் வெளியே நனைந்து கொண்டிருந்தாள். அதைக் கண்ட அவர் அவளை

உள்ளே அழைத்து, ஈரப் புடவையை மாற்றிக் கொள்ளு மாறு தன்னுடைய உத்தரீயத்தைக் கொடுத்தார். உடனே அவளும் அவரது காலைப் பிடிக்க, இதனால் மயங்கிய அவர் அவள் மீது மயக்கம் கொண்டார். அவளும் அவரை தன் வயப்படுத்திவிட்டு, தன்னுடைய சொந்த ஊரான திருக் கரம்பனூருக்குச் சென்று விட்டாள் அவள் மீதுள்ள மயக்கம் காரணமாக இவரும் அவளைத் தேடிச் சென்று, அவளது வீட்டு வாயிற்கதவைத் தட்டினார். பொருள் ஏதும் இல்லாத அவரை ஏற்றுக் கொள்ள மறுத்தாள் தேவதேவி. ஆனால் அவரோ அவளது வீட்டு வாயிலிலேயே தவங்கிடந்தார்.

**கண்ணன் :** எவ்வளவு நாட்கள் தவங்கிடந்தார்? எம்பெருமான் வந்து அவரை ஆட்கொள்ள வில்லையா தாத்தா?

**தாத்தா :** இதைக் கண்ட ஸ்ரீரங்கநாதன் தன்னுடைய திருவாராதன பாத்திரமான பொன் வட்டிலை எடுத்துக் கொண்டு மானிட உருவில் வந்து தேவதேவியின் வீட்டிற்குச் சென்று அவளிடம் வட்டிலைக் கொடுத்து விட்டு, "நான் விப்ரநாராயணரின் தூதன், அழகிய மணவாளன் என்னும் பெயருடையவன். அவரால் அனுப்பப்பட்டவன்" என்று கூறி வட்டிலை கொடுத்துவிட்டு, விப்ரநாராயணரிடம் சென்று 'உம்மை தேவதேவி அழைக்கிறாள்' என்று கூற, விப்ரநாராயணரும் மகிழ்ச்சியோடு உள்ளே சென்றார்.

**நாராயணன் :** அப்படியானால் அந்தவட்டிலை யாருமே தேடவில்லையா தாத்தா?

**தாத்தா :** மறுநாள் பொழுது விடிந்தபோது ஸந்நிதியில் பொன் வட்டில் காணாது போகவே, அர்ச்சக பரிசாரகர்கள் சோழராஜனிடம் முறையிட்டனர். ராஜாவும் பரிசாரகர்

களைத் தண்டிக்க முற்பட, அப்போது அங்கே வந்த தேவ தேவியின் வேலைக்காரி தன்னுடன் தொடர்புடையவன் தண்டிக்கப்படுவதைக் கண்டு 'பொன் வட்டிலை விப்ர நாராயணர் தேவ தேவிக்கு கொடுத்தனுப்பினர். அவள் அதை தலையணையின் கீழ் வைத்திருக்கிருள், என்று கூறினள். உடனே அதைக் கைப்பற்றி, அரசன் தேவதேவியை விசாரிக்க அதற்கு அவள் 'விப்ர நாராயணருடைய தூதன் தான் கொண்டு வந்து கொடுத்தான், எனக்கு ஒன்றும் தெரியாது' எனக் கூறினள். விப்ர நாராயணரை விசாரிக்க 'எனக்கு தூதனும் இல்லை. நான் பொன் வட்டிலைக் கண்டதுமில்லை' என்று கூறினர் அரசன் தேவதேவியை வட்டிலோடு அபராதத் தொகையைச் செலுத்துமாறு ஆணையிட்டு, விப்ர நாராயணரை சிறையிலும் அடைத்தான்.

**கண்ணன்:** அப்படியானல் எம்பெருமான் வந்து தான் எடுத்ததாகச் சொல்லவில்லையா? அவர் சிறையிலேயே மீதி காலத்தையும் கழித்தாரா தாத்தா?

**தாத்தா :** பிராட்டி எம்பெருமானிடம் பொரிசு செய்ய, எம்பெருமானும் சோழராஜனின் கனவில் தோன்றி 'விப்ர நாராயணரின் முன்வினைப் பயனைக் கழிப்பதற்காக நாமே அந்த பொன்வட்டிலை எடுத்து சிறைவாஸம் பண்ணும்படி செய்தோம். அவரை விடுதலை செய்து நமது திருமாலை கைங்கர்யத்துக்கு அனுப்ப வேணும்' என்று நியமித்தருளினர், உடனே அரசனும் அவரை சிறையிலிருந்து விடுவித்து பல உபசாரங்களைச் செய்து தண்டனிட்டு விடுதலை செய்தான். விப்ர நாராயணரும் தம் இழி செயலை நினைந்து, அதற்கு பிராயச்சித்தமாக அச்சுதனடியார்களுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பருகி பரிசுத்தியடைந்தார்.

**ஸ்ரீதேவி :** இவர் எந்த திவ்ய ப்ரபந்தங்களையும் பாட வில்லையா தாத்தா?

**தாத்தா :** ஏன் பாடவில்லை? இவர், திவ்ய தேசங்கள் தோறும் அலைந்து திரியும் மற்றை ஆழ்வார்களைப் போலல் லாமல், ஸ்ரீரங்கநாதனிடமே பற்று கொண்டு, அவரை அநுபவித்து "திருமாலை" "திருப்பள்ளியெழுச்சி" என்ற இரு திவ்ய ப்ரபந்தங்களை அருளிச் செய்தார். தேவதேவியும் இவருடைய பெருமையைக் கண்டு மனம் திருந்தி தன் னுடைய சொத்துக்களையெல்லாம் பெருமாளுக்கு ஸமர்ப் பித்துவிட்டு கோயிலில் திருவலகிடுதல் முதலான கைங்கர் களைச் செய்து வாழ்ந்து உய்ந்து போனாள்.

**நாராயணன் :** ஒரு சந்தேகம் தாத்தா. அவருக்கு எப்படி தொண்டரடிப்பொடியாழ்வார் என்று பெயர் வந்தது?

**தாத்தா :** இவர் அச்சுதனடியார்களின் அடிப்பொடியே (கால் தூசியே) சிறந்தது என்று உறுதி கொண்டு 'தொண்டரடிப்பொடி' என்ற திருநாமத்தையும் கொண் டார். இவர் எம்பெருமானைவிட அவனது அடியார்களிடம் பக்தி செய்வதையே நோக்கமாகக் கொண்டார். அதே போல நீங்களும் எம்பெருமானின் அடியார்களுக்குத் தொண்டு செய்து, பேரும் புகழும் பெறுவீர்களாக!

---

## கீதாசார்யன் சந்தா விவரம்

**ஆயுள் சந்தா** — ரூ. 250

**வருடச் சந்தா** — ரூ. 12

# கண்ணன் கதைகள்

தீபம். நா. பார்த்தசாரதி

## 17. அன்பின் நிறைவு

கண்ணன், பலராமன், முதலியவர்கள் பிருந்தாவனம் பகுதியில் வசித்துவரும்போது எண்ணற்ற 'விந்தை நிகழ்ச்சி கள் நடைபெற்றன. உண்மை அன்பின் தன்மையை விளக் கும் ஒரு நிகழ்ச்சியை இங்கே இந்தக் கதையில் காண்போம்.

பிருந்தாவனத்திற்கு அண்மையிலுள்ள காட்டில் சில முனிவர்கள் மிகச் சிறப்பான வேள்விகளைச் செய்து வந்தனர். இறைமையின் கனிவை எதிர் நோக்கிச் செய்யும் அந்த வேள்விகளில் உண்மை அன்பு இருக்கிறதா இல்லையா என்பதை ஆராயும் அவா கண்ணனுக்கு ஏற்பட்டது. கண்ணன் அதனைச் சோதனை செய்து பார்க்க விரும்பினன். தன்னைச் சுற்றிலும் இருந்த கோகுலத்துச் சிறுவர்கள் சிலரை அழைத்தான்.

''இளைஞர்களே! இப்போது நீங்கள் நான் சொல்லு கின்றபடி கேட்க வேண்டும். பக்கத்து வனத்தில் வேள்வி செய்துகொண்டிருக்கும் முனிவர்களிடம் போய் உங்களுக் குப் பசிப்பதாகச் சொல்லிச் சோறு கேட்க வேண்டும். உங்களை இன்னரென்று அவர்கள் கேட்டால், கண்ணனுக்கும் பலராமனுக்கும் வேண்டியவர்கள், அவர்கள்தான் எங்களை இங்கே அனுப்பினர், என்று சொல்லுங்கள்; போய் வாருங்கள்'' எனக் கூறி அவர்களை முனிவர்களிடம் அனுப்பி வைத்தான் கண்ணன்.

கோகுலத்து இளைஞர்கள் முனிவர்கள் வேள்வி செய்யும் இடத்திற்குச் சென்றனர். கண்ணன் கூறியனுப்பியதைச் சொல்லிப் பசிக்கு உணவு தருமாறு கேட்டனர். வேள்விச்சாலையில் உணவுப் பொருள்கள் மலைமலையாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தும் அங்கிருந்த முனிவர்களுக்கு அவற்றைத் தருவதற்கு மனம் வரவில்லை. ''கொடுக்க முடியாது'' என்பதையாவது வாய்திறந்து கூறியிருக்கலாம். அதையும் அவர்கள் கூறவில்லை. வந்து கேட்ட இளைஞர்களைப் பொருட்படுத்தாதவர்களைப்போல நடந்து கொண்டனர். கண்ணனும், பலராமனும் சொல்லி யனுப்பியதாக இரண்டு மூன்று முறை கூறிப் பார்த்தும் பயனில்லை. கண்ணனையும் பலராமனையும் யாரோ சாதாரண மானிடர்களென்று நினைத்து வாளாவிருந்தனர் அவர்கள். தாங்கள் செய்யும் வேள்விக்குத் தலைவனாகும் தகுதியும், பெருமையும் உள்ள தெய்வப் பிறப்பே கண்ணன் என்பதை அவர்கள் உணரவில்லை. இளைஞர்களுக்கு அவமானமாக இருந்தது. சிறிது சினமும் உண்டாயிற்று. அவர்கள் அப்படியே கண்ணனிடம் திரும்பி வந்தார்கள். தங்களிடம் முனிவர்கள் நடந்து கொண்ட விதத்தைக் கூறினர். அதைக் கேட்டதும் கண்ணனுக்கும் பலராமனுக்கும் அடக்க முடியாத ஆத்திரம் ஏற்படுமென்று அவர்கள் எதிர்பார்த்தார்கள். கண்ணன் ஆத்திரப் படவில்லை. அமைதியாகப் புன்னகை செய்தான். 'உலகத்தை எங்கே எப்படி வெற்றி கொள்ள முடியும்?' என்ற மர்மத்தை அறிந்து வைத்துக் கொண்டிருக்கிறவன் சிரிக்கின்ற சிரிப்பாக இருந்தது அது.

''இளைஞர்களே! முனிவர்கள் இடக்கிறார்கள். அவர்கள் அவமதிப்பைக் கண்டு சோர்வடையாதீர்கள் நேரே மறுபடியும் அங்கு செல்லுங்கள். எந்த முனிவர்கள் உங்களைப் பொருட்படுத்தவில்லையோ அந்த முனிவர்களின்

(தொடர்ச்சி 49ம் பக்கம் பார்க்க)

# திருவரங்கன் உலா

ஸ்ரீவேணுகோபாலன்

## 17. ஸ்ரீரங்கநாச்சியார் நிலை

மறுநாள் காலையில் எழுந்து ''இனியும் அரங்கன் இங்கே இருப்பது தவறு''. என்று தீர்மானித்து அவரை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு நெருக்கமான செடி, கொடி, மரங்கள் அடர்ந்த மலைக்காட்டினை நுழைந்து சென்று மலையின் வேறு ஒரு பகுதியை வந்தடைந்தார்கள்.

அங்கே ஆசுவாசப் பட்டுவிட்டு, ''இன்றைய நாள் பொழுதை எப்படிக் கழிப்போம்'' என்று எண்ணும் வேளையில் மூத்த கொடவர், மற்ற இருவர்களையும் நோக்கி, ''எத்தனை நாட்கள் பெருமாள் இப்படி வெறும் கனி வகைகளையே புசித்து உபவாசம் இருப்பார்! அவரது மேனிக்கு இவை ஒத்துக் கொள்ளுமா? அன்னம் கிடைக்க வழி செய்ய வேண்டாமா? இதற்கு நான் ஒன்று செய்கிறேன்; நமக்குக் கிடைத்துள்ள பொன் ஆபரணத்தை கொண்டு போய் விற்று, தேவையான தானியங்களை வாங்கி வந்து விடுகிறேன்'' என்று கூறினார்

மற்ற இருவரும் ஆமோதிக்கவே அவர்களிடம் விடை பெற்று அந்த மூத்த கொடவர் மலையிலிருந்து கீழே இறங்க ஆரம்பித்தார்.

சரிவில் வந்தபோது நான்கு தாடி வைத்த பேர்வழிகள் மலைமீது ஏறுவதைக் கண்டு திகைத்து அவர்களைப் பார்க்க,

அவர்களும் இவரைக் கண்டு வெகு ஆச்சரியத்துடன் ''ஹோ'' என்று கத்தினார்கள்.

மலையிலிருந்து கீழிறங்கும் மூத்த கொடவரை நீ நோக்கி ஹோ' என்று கத்தி விட்டு, அந்த நான்கு தாடிக்காரர்களும், ஓடி வந்தார்கள். கொடவரை நெருங்கி அவரை இறுகக் கட்டிக் கொண்டார்கள்.

அவர்களை இன்னார் என்று இனம் கண்டு கொண்ட கொடவரும், ''ஆகா, அழகிய நம்பியா? பார்த்து பல மாதங்கள் ஆயித்தே! நம்பி! நாச்சியார் என்ன ஆனார்? சௌக்யமாய் இருக்கிறாரா? அவருக்கு பூஜை, நைவேத்தியங்கள் எல்லாம் சரிவர நடக்கின்றனவா? திருவரங்கம் எப்படி இருக்கிறது? அங்கிருந்து அந்நியப் படைகள் அகன்று விட்டனவா?'' என்று சரமாரியாகக் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனார்கள்.

இப்போது திருவரங்க நாச்சியாருடன் புறப்பட்டு மேற்கு நோக்கிச் சென்ற பரிவாரங்களைப் பற்றி சிறிது கூற வேண்டியிருக்கிறது.

திருவரங்கக் கோவிலில் நாச்சியாருக்கு என்று தனி ஸன்னிதி, தனி மரியாதைகள். அரங்கர்க்கு நிகரான வழிபாடுகள் யாவும் அவருக்கு உண்டு.

கலகம் நடந்த போது, நாச்சியாரின் மூலவரான கல் விக்கிரகத்தை ஸன்னிதிக்கு அருகிலுள்ள தோட்டத்தின் வில்வ மரத்தடியில் புதைத்து வைத்தார்கள்.

உத்சவ விக்கிரகத்தை ஒரு பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி, நகை, நட்டு, திரவியங்களை எல்லாம் பெட்டகங்களில் அடைத்து, துணையாகப் பரிவாரங்களைக் கூட்டி, இந்த ஊர்வலத்தை மேற்கு நோக்கிப் போக வைத்திருந்தார் பஞ்சு கொண்டான்.

இந்த ஊர்வலத்தில் பின்னர் அழகிய நம்பியும், அவனது ஆட்களும் சேர்ந்து கொள்ள வேண்டும் என்று ஏற்பாடாகி இருந்தது.

திருவரங்கக் கோட்டை விழுந்த பின் அழகிய நம்பியும் அவனுடன் எஞ்சிய ஆட்களும் பஞ்சுகொண்டான் திருவுடலை வடகாவேரிக்கு எடுத்துப் போய் தகனம் செய்த பிறகு மேற்கு நோக்கிப் புறப்பட்டனர்.

இரண்டு நாட்கள் பிரயாணம் செய்த பிறகு ஊர்வலத்தை கண்டு பிடித்து, அங்குள்ள பரிவாரத்தார் அனைவருடன் ஆலோசித்து ஊர்வலத்தை நேராக திருப்பதிக்கு எடுத்துச் சென்று விட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான்.

அதன் பிறகு ஊர்வலம் மேலே செல்ல, சாலை மார்க்கமாய்ச் செல்லாமல், அழகியநம்பி பிறகு காட்டு மார்க்கமாகவே அதை அழைத்துப் போனான்.

வழியில் தென்பட்ட இரு கள்ளர் கூட்டத்தினரிடம் நல்ல வார்த்தை சொல்லி தப்பித்து, மூன்று தினங்கள் பயணம் செய்து, நான்காம் நாள் மாலையில் காட்டு நடுவில் செல்லும் போது அங்குள்ள மரங்களிடையே ஏதோ இயக்கங்கள் இருப்பதைப் பார்த்து, பழைய கள்வர் கூட்டத்தினர் திரவியங்களை அபகரிக்கும் எண்ணத்துடன் ஊர்வலத்தை விடாது தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சூசகமாக அறிந்து உடனே ஆலோசனையில் இறங்கி, அந்தக் கணமே எல்லாரும் பிரிந்து ஓட வேண்டும் என்று தீர்மானத்திற்கு வந்தான்

யார் யார் எந்தத் திசைச் செல்ல வேண்டும் என்று முடிவெடுப்பதற்குள், குதிரைகளின் குளம்பொலிகள் தொலைவில் கேட்கவே, அது அந்தக் கள்வர் தலைவர்கள் தான் என்று அறிந்த உடனே, தீவர்த்திகளின் நெருப்பால் அருகுள்ள

காய்ந்த புதருக்கெல்லாம் தீ வைத்து, அவை கிளப்பிய புகையில் அவரவர் நினைத்த திசைக்கு ஓடலானார்கள்.

ஆபரணங்கள் நிறைந்த மூன்று பெட்டகங்களைத் தொடர்ந்து சென்ற அழகியநம்பி, ஒரு நாழிகை அளவு ஓடி ஒரு கணவாயின் அருகில் போய்ச் சேர்ந்தான்.

மூன்று பெட்டகங்களைத் தூக்கி வந்த ஆறு ஊழியர்களும் அவர்களுக்கு மாற்றுத் தோள் கொடுப்பதற்காக வந்த மூன்று உபரி ஊழியர்களும் களைத்துப் போய், கீழே அமர்ந்து அன்றைய இரவை அங்கே கழிக்க விரும்ப, அப்படியே ஆகட்டும் என்று அழகிய நம்பியும் அங்கேயே தங்கிவிட்டான்.

இரவில் தூக்கமில்லாது புரளும் வேளையில் ஏதோ கசமுச வென்று குரல்கள் கேட்டு திடுக்கிட்டு எழுந்து சத்தம் வந்த திசை நோக்கிச் சென்ற அழகியநம்பி, அங்கே அந்த ஆறு ஊழியர்களும் அந்தப் பெட்டகங்களை தாங்களே அபகரித்துச் செல்ல சதி பேசுவதை அறிந்து திடுக்கிட்டான்.

அவன் என்ன செய்வது என்று முடிவு செய்வதற்குள் அந்த அனைவரும் உருவிய வாளோடு ஓடிவருவதைக் கண்டு சடக்கென விரைந்து மற்ற மூவரையும் எழுப்பிய நம்பி உடனே சதிகாரர்களுடன் சண்டை செய்வதற்குச் சித்தமானான்.

வந்த அனைவரும் அவர்களைத் தாக்கத் தொடங்கியதும், உடன் அழகியநம்பி வாளைச் சுழற்றவே, முறையாகச் சண்டை பயிலாத அந்த ஊழியரில் ஒருவன் இறக்க, மற்றவர்கள் கையிலும், உடம்பிலும் காயம்பட்டு தப்பித்தோம், பிழைத்தோம். என்று ஓடி விட்டார்கள்.

பிறகு நம்பியும், இதர மூவர்களும் விடியும் வரை விழித்திருந்து, வெளிச்சம் வந்ததும் பெட்டகங்களை சிறிது தூரம் தூக்கிக் கொண்டு போய், பெரிய குழி ஒன்று வெட்டி, அதனுள் அவற்றை இறக்கி, மண் இட்டு மூடி, தழை கொடி

கலை மேலே பரப்பி அடையாளத்திற்காகக் கற்களைக் கொண்டு வைத்து, பிறகு கிழக்குத் திசை நோக்கிப் பிரயாணம் செய்யத் தொடங்கினார்கள் முடிவில் கொடவர்களை வந்தடைந்தார்கள்.

துக்கத்தில் ஆழ்ந்திருந்த அழகிய நம்பியும் மெள்ளத் தழ தழத்து, நாச்சியார் ஊர்வலத்திற்கு நேர்ந்த கதியையும், நகைப் பெட்டகங்களைப் புதைத்து விட்டு வந்த கதையையும் விரிவாகக் கூறினான்

'சுவாமி! அநியாயம் நடந்து விட்டது. நாச்சியாரைக் காப்பாற்ற வகையில்லாமல் போனேன். பஞ்சு கொண்டா னுக்குக் கொடுத்த வாக்குறுதியிலிருந்து பிறழ்ந்து விட்டேன்.'' என்று பலவாறாக நொந்து புலம்பினான் அவன்.

அவனைத் தேற்றி எடுத்த கொடவர், அரங்கன் ஊர் வலத்திற்கு நடந்த கஷ்ட நஷ்டங்களை எல்லாம் கூறி, "'எல்லாவித இன்னல்களிலிருந்தும் நம் அரங்கன் தப்பி விட்டார்! இனி என்ன நடக்குமோ?'' என்று கூறி மலை மேலே அரங்கன் இருக்கும் இடத்தை அடையாளம் சொல்லி, அதற்குப் போகும் வழியையும் காட்டிக் கொடுத்தார்.

பிறகு அவர், ''இப்போது அரங்கனுக்கு தினப்படி அமுதுக்குக் கூடக் கஷ்டமாகி விட்டது நம்மிடம் தானியங் களோ, வெஞ்சனங்களோ இல்லை ஆகவேதான் கீழே போய்க் கொண்டிருக்கிறேன்.'' என்று கூறி விடை பெற்று மலைச் சரிவில் முள்ளிலும், கல்லிலும் காலைப் பரபரவென்று வைத்து இறங்கினார்.

(தொடரும்)

# ஸுதர்சனர் பதில்

ஸ்ரீகிருஷ்ணஸ்வாமி ஐய்யங்கார்,
(ஸுதர்சனர்), திருச்சி-17

**1) ப்ராப்யம் என்றால் என்ன?**

அடையத்தக்க பலன் (பயன்) ப்ராப்யம் எனப்படுகிறது. இதை உபேயம், ஸாத்யம் என்றும் கூறுவதுண்டு. ப்ரஹ்மம் எனப்படும் பரம்பொருளே அடையத்தக்கதாகையால் அதுவே ப்ராப்யம் முதலான பதங்களால் சொல்லப் படுகிறது.

**2) ப்ராப்தா என்றால் என்ன?**

அடைபவன் ப்ராப்தா எனப்படுகிறான். ப்ராப்யமான ப்ரஹ்மத்தை முக்தி நிலையில் அடைபவனான ஜீவன் ப்ராப்தா எனப்படுகிறான்.

**3) பலம் என்பது என்ன?**

ஜீவன் ப்ரஹ்மத்தை முக்தி நிலையில் அடைந்து, பெறும் பயனாகிற கைங்கர்யம் பலம் எனப்படுகிறது. இதையே புருஷார்த்தம் என்றும் பேறு என்றும் கூறுவதுண்டு.

**4) உபாயம் என்பது என்ன?**

முற்கூறிய பலத்தைப் பெறுவதற்கு வழி எதுவோ அதுவே உபாயம் எனப்படும். இதை ஸாதனம், ப்ராபகம் என்றும் கூறுவதுண்டு. ப்ராப்யமான பரம்பொருளை அடைவதற்கு உபாயமும் அப்பரம்பொருளே என்பது எல்லா சாஸ்த்ரங்களின் தேர்ந்த முடிவு. எம்பெருமானுடைய முகமலர்த்திக்கேயான கைங்கர்யத்தை முக்திநிலையில் பெற

விரும்புகிறவர்கள் தமது முயற்சி எதையும் அவனைப் பெற உபாயமாக நினையாமல், எம்பெருமானையே உபாயமாக உறுதி பூண்டிருக்க வேண்டும். இவ்வளவு பக்குவமில்லாமல் மோக்ஷமடைவது தம்முடைய ஆனந்தத்திற்குமாகும் என்று நினைப்பவர்களுக்காக எம்பெருமான் கர்மயோகம், ஞான யோகம், பக்தியோகம், திருநாமஸங்கீர்த்தனம், திவ்யதேச வாஸம் முதலான உபாயங்களை சாஸ்த்ரங்களில் விதித்திருக்கிறான். ஜீவன் ஸாதிக்க வேண்டிய உபாயங்களாகையாலே இவை ஸாத்யோபாயம் எனப்படும். இவற்றுக்கு எம்பெருமானுடைய ஸங்கல்பத்தினாலேயே உபாயத்வம் ஏற்பட்டிருக்கிறபடியால் இவை செயற்கையான உபாயங்கள்; இயற்கையான உபாயங்களன்று. எப்போதும் ஸித்தமாயிருக்கும் உபாயமாகையால் எம்பெருமான் ஸித்தோபாயம் எனப்படுகிறான். இவனே இயற்கையான உபாயமாவான்.

**5) ப்ராப்தி விரோதி என்றால் என்ன?**

முன்கூறிய பலனை அடைவதற்குத் தடையாயிருப்பது ப்ராப்திவிரோதி எனப்படும். அநாதிகாலமாக ஜீவனுக்குத் தொடர்ந்து வரும் சரீரஸம்பந்தம், அதனால் விளையும் அஜ்ஞானம் (தன் ஸ்வரூபத்தையும் பரஸ்வரூபத்தையும் அறியாமை), அதனால் உண்டாகும் புண்ய பாபகர்மங்கள், அதனால் விளையும் வாஸனை, அதனால் விளையும் சப்தாதி விஷயருசி ஆகியவை ப்ராப்தி விரோதிகள் எனப்படுகின்றன.

**6) அர்த்த பஞ்சகம் என்றால் என்ன?**

முன் ஐந்து கேள்விகளிலும் விவரிக்கப்பட்ட ப்ராப்யம், ப்ராப்தா, ப்ராப்திபலம், ப்ராப்த்யுபாயம், ப்ராப்திவிரோதி என்னும் இந்த ஐந்து அர்த்தங்களும் அர்த்த பஞ்சகம் எனப்படும். அறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் இவற்றை அறிய வேண்டுமாகையாலே இவற்றையே ஸகல சாஸ்த்ரங்களும் விளக்குகின்றன.

7) 'ப்ராப்தாவும் அவனே' (ஸ்ரீவசனபூஷணம் 70) என்று பிள்ளைலோகாசார்யர் 'எம்பெருமானே ப்ராப்தா' என்று அருளிச்செய்திருக்கும்போது அர்த்த பஞ்சகத்தில் ஜீவனை ப்ராப்தா என்று கூறுவது எப்படிப் பொருந்தும்?

முக்தி நிலையில் எம்பெருமான் ஜீவனை அடைகிறான். ஜீவனும் எம்பெருமானை அடைகிறான். ஆகையால் இருவரையுமே ப்ராப்தா என்று சொல்ல இடமிருக்கிறது. அதையிட்டு சாஸ்த்ரங்கள் ஜீவனைப்ப்ராப்தா என்று பல இடங்களில் கூறுகின்றன. அதனாலேயே அர்த்தபஞ்சகத்திலும் ஜீவன் ப்ராப்தா எனப்பட்டான். ஆயினும் உண்மையை ஆராய்ந்தால், அனாதி காலமாக இந்த ஜீவனைப் பெறவிரும்பியிருப்பவன் எம்பெருமானே' அதற்காக உலகை ஸ்ருஷ்டிப்பது, அதனுள் அவதரிப்பது முதலான அருஞ்செயல்களை இடைவிடாமல் செய்கிறான். இந்த ஜீவனோ 'யாதானும் பற்றி நீங்கும் விரதம் (திருவிருத்தம் 95) என்கிறபடியே 'அனாதிகாலமாக எம்பெருமானைத் தவிர்ந்த வேறு ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிக்கொண்டு, அவனைவிட்டு நீங்குவதையே விரதமாகக் கொண்டிருக்கிறான். எம்பெருமானுடைய முயற்சிகள் ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு ஜீவன் விஷயமாகப் பலித்த பின்பே ஜீவனுக்கு எம்பெருமானை அடையவேண்டும் என்னும் ஆசை உண்டாகிறது. அந்த ஆசையையும் படிப்படியாக வளரச் செய்து, ஜீவன் தன்னை அடையும்படியாகச் செய்பவன் எம்பெருமானே! இதையெல்லாம் பார்க்கும்போது, 'ஈச்வரலாபம் சேதனனுக்கு' என்று சொல்வதைக் காட்டிலும் 'சேதனலாபம் ஈச்வரனுக்கு' என்று சொல்லுவதிலேயே பொருத்தம் உள்ளது என்று விளங்குகிறது. இதைத் திருவுள்ளம் பற்றியே பிள்ளை உலகாசிரியர் 'ப்ராப்தாவும் அவனே' என்று அருளிச் செய்தார்.

# திருவாலி

**திருவாலி திருநகரி :** தமிழ்நாட்டில் இரண்டு திருநகரிகள் இருக்கின்றன. இரண்டும் ஸ்ரீவைஷ்ணவம் விளைந்த இடம். ஒருதிருநகரியில் நம்மாழ்வார் அவதரித்தார்; மற்றொரு திருநகரி திருமங்கையாழ்வார் அவதாரஸ்தலம். நம்மாழ்வாரின் திருநகரியை ஆழ்வார் திருநகரி என்பர். திருமங்கையாழ்வாரின் திருநகரியைத் திருவாலி திருநகரி என்பர். திருவாலியும், திருநகரியும் ஒரே ஊராகவே இருந்ததாகத் தெரிகிறது. ஆயினும், இந்நாளில் திருவாலிவேறு திருநகரிவேறு என்று இடங்கள் தனித்தனியாகவே கூறப்படுகின்றன. திருவாலியிலிருந்து திருநகரிக்கு ஏறக்குறைய நான்கு மைல் தொலைவு இடைப்பட்டு இருக்கிறது.

## ஸ்தலசயனத்துறைவார்

திருமங்கையாழ்வாருக்கு 'ஆலி நாடன்' என்ற திருநாமமும் உண்டு. திருநகரி, குறையலூர் முதலிய பகுதிகள் எல்லாம் சேர்ந்து 'திருமங்கை நாடு' என்ற பெயரோடு பெரிய நிலப்பகுதியாக இருந்தது என்றும், அதன் அரசராக ஆழ்வார் இருந்ததாகவும் தெரிகிறது. திருவாலியின் செழிப்பையும், ஆழ்வாருக்குத் திருவாலியில் உள்ள ஈடுபாட்டையும், திருவாலியின் அமைப்பையும் காணும்போது திருவாலி தலைநகரமாக இருந்திருக்கக் கூடும் என்று அறியப்படுகிறது. எங்கும் ஆலைகள் நிறைந்திருந்ததாகக் கூறும் ஆழ்வாரின் திருவாக்கும் இதற்குத் துணைபுரிகிறது'

திருமங்கையாழ்வாரின் திருவாக்கில் வயலாலி மணவாளன் என்றும் எவரி வெஞ்சிலையான் என்றும் திருநாமங்கள் வெளிவந்துள்ளன. இந்த எம்பெருமான்கள் திருநகரியில் ஆழ்வார் ஸன்னிதியிலேயே எழுந்தருளி இருக்

கிருர்கள். திருவாலியின் இப்போது லக்ஷ்மீ நரஸிம்மனே எழுந்தருளி இருக்கிருர். ஆயிரம் ஆண்டுகளில் பலமாறுதல்கள் ஏற்படுவது இயற்கையே!

ஆனல், ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்திற்கு முதல் நாள் திருநகரியிலிருந்து வயலாலி மணவாளன் திருவாலிக்கு எழுந்தருளியிருக்கிருர். திருக்கல்யாண உத்ஸவம் நடைபெறுகிறது. அதன் பிறகு திருநகரிக்கு எழுந்தருளும் போது திருமணங் கொல்லை என்னுமிடத்தில் (மறக்க முடியாத) அவசியம் ஸேவிக்க வேண்டிய வேடு பறி உத்ஸவம் நடைபெறுகிறது

திருவாலியில் அழகிய சிங்கர் திருவை வலப்பக்கத்தில் அமர்த்திக் கொண்டு (ஆலிங்கனம் செய்துகொண்டிருக்கிருர்) அணைத்துக் கொண்டிருக்கிருர். இறையும் அகலகில்லேன் என்று சேர்ந்திருக்கும் இந்தத் திவ்ய தம்பதியர் நம்மை அன்போடு வணங்குவோருக்கு விரைவில் நற்பயன்களை அளிப்பவர்களாக முகம் மலர்ந்து ஸேவை ஸாதிக்கிருர்கள்.

**இப்படியும் ஒரு ஆசையோ!**, திருவாலியம்மானே! நீ தான் திருக்கடல் மல்லை எம்பெருமான்! ஐயமில்லை! தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பன்றே நீ! பிரம்மா முதலானவர்கள் உன்னைச் சயன திருக்கோலத்தில் ஸேவிக்க வேண்டுமானல் திருப்பாற்கடலுக்கே செல்ல வேண்டும். பாற்கடலில் உனக்கு இருக்கும் போக்யம் வேறு எதிலுமில்லை. திருப்பாற்கடல் உனக்கு மஹாலக்ஷ்மியைக் கொடுத்து நாராயணனுக இருந்த உன்னை ஸ்ரீமந் நாராயணனுக விளங்கச் செய்தது! உன் பெருமையும் பெருகத் தொடங்கியது. ஆதலால், பாற்கடலில் நீ ஆசை கொண்டிருப்பது நியாயமே. புண்டரீக மஹரிஷியின் பக்தியை நன்கு உணர்ந்தாய்! பாற்கடலிலேயே சயனித்துக் கொண்டிருந்தால் எவரும் நம்மிடம் வரார் என்பதை அறிந்து கொண்டு அந்த முனிவருக்கு அருள் புரியத் திருக்கடல்

மல்லைக்கு வந்தாய்! வெள்ள வெள்ளத்தின்மேல் ஒரு பாம்பை மெத்தையாக விரித்து அதன்மேல் படுத்துப் பழகிய நீ, கடற்கரை மணலில் சயனித்துக் கொள்ளவும் கற்றது எவ்வாறோ! புண்டரீக மகரிஷிக்காகவும், மற்றவர்களுக்காகவும் சங்கு தங்கு கடல்மல்லையைப் போக்யமான இடமாக ஆக்கிக் கொண்டு சயனித்து இருக்கிறாய்! இதுவும் சரியான செயல் தான்!

ஆனால், அடுத்த செயல் எனக்கு மிகவும் வியப்பை அளிக்கிறது! நிலையாக இருப்பதற்கு நீ ஒரு இடத்தைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று விரும்பினால் இந்நிலவுலகில் உன் திருவுள்ளத்திற்கு ஏற்ற இடமே இல்லையா! ஆராமம் சூழ்ந்த அரங்கம் இல்லையா? சிந்து பூ மகிழும் திருவேங்கடம் இல்லையா? அல்லது கல்லுயர்ந்த நெடுமதிள் சூழ் கச்சிப்பதிதான் இல்லையா? எல்லா இடங்களையும் விட்டு என் மனத்தில் வந்து சேர்ந்தனையே! தூய்மையில்லாத மனத்தையும் தூய்மையாக்கிக் கொண்டு வந்தபார்த்தனே! உன்னுடைய கருணை எதைத்தான் செய்யாது?

விதுரருடைய திருமாளிகைக்குச் சென்று அமைவித்த உணவை உன்னுடைய கடாக்ஷத்தினாலே தூய்மையாக்கிக் கொண்டு உன் திருவுள்ளத்திற்கு உகந்தவாறு புசித்தனையே! கூனி வைத்திருந்த சந்தனத்தை விரும்பி வாங்கிப் பூசிக் கொண்டு மகிழ்ந்தாயே! மாலாகாரரும் எதிர் பாராமல் இருக்கும்போது அவரிருந்த இடம் சென்று மாலையை வாங்கி அணிந்து மகிழ்ந்தாயே! உன்னுடைய அருள் எதைத்தான் செய்யாது. உன்னுடைய விருப்பத்திற்கு ஏற்றவாறு ஒரு பொருளை மாற்றிக் கொள்ளும் சக்தி உனக்கே உண்டு. ஆதலால் என் மனத்தையும் தூய்மையாக்கிக் கொண்டு அருள் புரிந்து இங்கு என்னுள் புகுந்தாய்! இங்கேயே நிலைத்து இருக்கிறாய்!

கிடைக்கப்பெறாத நீ கிடைத்துவிட்டாய்! இனி இவ்விடம் விட்டுப் போக உன்னால் இயலாது. என்மீது உனக்கு இருக்கும் அருள்தானே உன்னை இங்குக் கொண்டு வந்து சேர்த்தது. அந்த அருள் மாறினாலன்றோ நீ இவ்விருந்து போக முடியும்! அருளும் மாறாது; இங்கிருந்துப் போகவும் இயலாது.

தேனுண்ணும் வண்டுகள் சண்பக மலர்களிலும், மல்லிகை மலர்களிலும் இருக்கும் தேனைப் பருகச் சென்று, அங்கு அவற்றோடே தழுவி இருந்தன. குளிர்ச்சிமிக்க மலர்களும் வண்டுகளுக்கு வெப்பம் அளிப்பதுபோல் தோன்றியதாம்! அந்த மலர்களோடு இருப்பதிலும் அலுப்பு ஏற்பட்டு விட்டதாம். அதனால்தான் தென்னை இளம் பாளைகளில் உள்ள மகரந்தத் தாதுகளிலே போய் அங்கே அலைகின்றவாம். நீயும் பாற்கடலையும், திருக்கடல் மல்லைப் பகுதியையும் துறந்து என்னை விரும்பி என் மனத்தே வந்து தங்கியிருக்கிறாய் என்கிறார் ஆழ்வார். தானாகவே வந்து ஆட்கொள்பவன் அணியாலி அம்மான்.

**பரகாலன் போற்றும் திருவாலி மாயன் :** இந்த ஆத்மா எம்பெருமானுக்கே அடிமை என்பதை சாஸ்திரங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன. இந்த ஆத்மாவை ரக்ஷிக்க அவனிருக்க வேண்டும், அவனையடைந்து தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க இந்த ஆத்மா நற்கதியைப் பெறுகிறது. நற்கதியைக் கொடுக்க பகவான் (ஸ்ரீமந் நாராயணன்) தயாராக இருக்கிறான்; ஆத்மா நற்கதியை அடைய இதைவிடச் சிறந்தவழி வேறு இல்லை. இதை மறந்து தவம் செய்கிறார்கள். இது எளிய செயலன்று; மிகவும் சுலபமான வழியை விட்டுத் துயர்தரும் வழியை எவரேனும் பின் பற்றுவரோ! 'ஊன் வாட உண்ணாது உயிர் காவலிட்டு உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து, தாம் வாட வாடத்

(தொடர்ச்சி 34ம் பக்கம்)

# அன்புள்ள வாசகரே !

இந்த இதழில் ஒரு மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதாகச் சென்ற இதழில் அறிவித்திருந்தோம். ஒன்றல்ல, இரண்டல்ல மூன்று மகிழ்ச்சியான செய்திகளை அறிவிக்கின்றோம்.

முதலாவது : ஆண்டுமலர் மிகச் சிறந்த முறையில் தயாராகிவிட்டது என்பதுதான். ஏற்கனவே மிகவும் தாமதமாகிவிட்டபடியால் வெளியீட்டு விழா என்று ஒன்றும் பெரிதாக வைத்துக் கொள்ளவில்லை. திருப்பாவை காலக்ஷேபத்திற்காகச் சென்னை எழுந்தருளும் ஸ்ரீ. உ. வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியால் திருப்பாவை காலக்ஷேபத் திருவடியில் ஒருநாள் வெளியிடப்படும். நேரில் கீதாசார்யன் அலுவலகத்திற்கு வந்து ஆண்டுமலரைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் 25-12-81 முதல் 5-1-82க்குள் வரலாம். அப்படிப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு 6-1-82 முதல் தபால் மூலம் அனுப்பப்படும். சுமார் 30 ரூபாய் விலையுள்ள ஆண்டு மலர் தபால் மூலம் அனுப்பும் போது தவறி விடாமல் இருப்பதற்காக ஒரு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதாவது ஆண்டு மலர் மிகக்குறைந்த கட்டணத்தில் (Minimum Charge) உங்களுக்கு V. V. P. மூலம் அனுப்பப்படும். அதாவது நீங்கள் தபால்காரரிடம் (சுமார்) ரூபாய் இரண்டு மட்டும் கட்டி புத்தகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

**இரண்டாவது:** ஆண்டு மலருக்குப் பேராதரவு அளித்ததோடு மட்டுமல்லாமல் மிகவும் பொறுமையாக இருந்ததற்குப் பரிசாக கீதாசார்யன் காலண்டர் ஒன்று கீதாசார்யன சந்தாதாரர்கள் அனைவருக்கும் இலவசமாக அளிக்கப்படும். ஒரு வண்ணப் படத்திற்கு இரண்டு மாதங்கள் என்று கணக்கில் ஆறு வண்ணப் படங்கள் கொண்ட காலண்டரில் முக்ய உத்ஸவங்களும் குறிப்பிடப் பட்டுள்ளன. இதுவும் தவறாமல் கிடைப்பதற்காக குறைந்த கட்டணத்தில் (Minimum Charge) V. V. P. மூலம் அனுப்படும். அதாவது தபால்காரரிடம் நீங்கள் (சுமார்) ரூபாய் ஒன்று மட்டும் செலுத்தி காலண்டரைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். நேரில் பெற விரும்புவோர் 1-1-82 முதல் 5 1-82க்குள் வரலாம். 15-1-82ல் கீதாசார்யன சந்தாதார்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே காலண்டர் அளிக்கப்படும் அதற்குப் பிறகு சந்தா செலுத்துபவர்களுக்கு கலாண்டர் கிடைக்காது. (அதிகப்படியான காலண்டர் வேண்டுவோருக்கு ஒரு காலண்டரின் விலை ரூபாய் 5 00) ஆண்டு மலர், காலண்டர் இரண்டையும் நேரில் பெற்றுக் கொள்வோர் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை.

**மூன்றாவது:** நமக்கே உரித்தான ஆசார்யத்துக்கும் ஆணித்தரமான எழுத்துக்களுக்கும் புகழ்பெற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் ஆசிரியர் ஸ்ரீ உ. வே S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் கீதாசார்யன் வாசகர்களுடைய கேள்விகளுக்குத் தொடர்ந்து பதிலளிக்க இசைந்துள்ளார். வாசகர்கள் கேட்க விரும்பும் கேள்விகளை கீதாசார்யனுக்கு எழுதியனுப்புங்கள். உடனடியாக 'ஸுதர்சனர்' பதில் கிடைக்கும்.

தவம் செய்ய வேண்டா! என்று கூறினார் திருமங்கையாழ்வார் புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதற்காகப் பலர் யாத்திரையாகச் செல்கிறார்கள். இவற்றால புண்ணியம் அடையலாம். ஆனால் இவ்வாறெல்லாம் புண்ணியத்தை மிகுதியாகச் சேர்த்தால் ஒருவேளை பகவானை அடையும் வழியைக் காட்டக்கூடும்! எம்பெருமானை நேராகவே அடைவதற்கு வழி இருக்கும்போது இவ்வெளிய வழியைப் பின்பற்ற வேண்டாவோ! 'பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும், ஐந்து நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா—விருப்புடைய வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க்கை தொழுதால் அஃகாவே தீவினைகளாய்ந்து' என்றார் பேயாழ்வார்.

ஆழ்வார்களும் ஆசாரியர்களும் காட்டிக் கொடுத்த அர்ச்சாவதார எம்பெருமான்களை அடைந்து வணங்குவதே நாம் உய்யும் வழியாகும். வாலியிடம் அஞ்சிய சுக்ரீவன் இராமனை சரண் அடைந்தான்; ராமனே தன்னைக் காப்பான் என்று நம்பினான். இராமன் மிக்க வலிமை கொண்ட வாலியை வென்று சுக்ரீவனுக்கு நல்வாழ்வு அளித்தான்) அவனே திருவாலி எம்பெருமான். கரதூஷணர்களை வென்றவுடன் சீதை இராமனை ஆலிங்கனம் செய்து கொண்டாள். (இங்கும் திருமகள் எம்பெருமானை ஆலிங்கனம் செய்து கொண்டிருந்தாள் என்றும் கூறுவார்கள்.) இவனைச் சரணடைந்தால் நற்கதி பெறலாம்; நான் இவ்வாறு பேறு பெற்றேன். என்கிறார் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

**கழன்றுபோம் வாயுவினைக் கட்டமைத் தீர்த்த**
**முழன்று போயசடமழுந்தேன்—அழன்று**
**பொருவாலி காலன் பரகாலன் போற்றும்**
**திருவாலி மாயனையே சேர்ந்து.**

# பேராயிரமும் ஓதுமின்கள்

க்ருத யுகத்தில் த்யானம் பண்ணுவதாலும் த்ரேதா யுகத்தில் யாகம் பண்ணுவதாலும் த்வாபர யுகத்தில் அர்ச்சனை பண்ணுவதாலும் பெறுகிற பலனைக் கலியுகத்தில் கேசவநாம ஸங்கீர்த்தன மாத்ரத்தினால் பெற்றுவிடலாம் என்பது.

**த்யாயந் க்ருதேயஜந் யஜ்ஞைஃ த்ரேதாயாம் த்வாபரேர்ச்சயந் |**
**யதாப்னோதி ததாப்னோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம் |**

---

K. B தேவராஜன்

---

என்ற ச்லோகத்தினால் விளங்கும். ஆகவே எம்பெருமானுடைய திருநாமங்களைப் பாடினால் எல்லா நன்மைகளும் கிட்டும். நம்மாழ்வாரும் "பாடீர் அவன் நாமம் வீடே பெறலாமே" என்றருளிச் செய்தார். அப்படி உள்ள அவன் திருநாமங்களை நாம் நம் மனதில் தோன்றினபடி பாடுவதைக் காட்டிலும் பெரியவர்கள் வெளியிட்டுள்ள க்ரமத்திலேயே பாடுவது சாலச் சிறந்ததாகும். ஏனெனில் எல்லாம் அறிந்தவர்களான நம் பெரியவர்கள் பொருளுக்கேற்ப அவனுடைய திருநாமங்களையும் ஸ்தோத்ரங்களையும் அடைவுபடுத்தி இயற்றியிருக்கிறார்கள். ஒரு அடைவில் ஸ்தோத்ரம் பண்ணத்தெரியாத நம்போல்வாருக்காகத் தான் அப்பெரியவர்கள் தாங்கள் எம்பெருமானை ஸ்துதித்த ப்ரகாரத்தை நூல்களாகவும் இயற்றி வைத்திருக்கிறார்கள். அவற்றில் தலைசிறந்ததும் புகழ்வாய்ந்ததுமான ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தின் பெருமையை அனுபவிப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்திற்கு முக்கியமாக மூன்று பாஷ்யங்கள் அமைந்துள்ளன. அவைகளாவன அத்வைத ஸம்ப்ரதாயத்துக்குச் சேர ஸ்ரீ சங்கர பகவத் பாதரின் பாஷ்யமும், விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயாநுஸாரியான ஸ்ரீபராசர பட்டரின் பகவத்குண தர்பணம் என்கிற பாஷ்யமும் மத்வ ஸம்ப்ரதாயத்தை அநுசரித்த ஸ்ரீராகவேந்தர ஸ்வாமிகளின் பாஷ்யமும் ஆகும். அவற்றுள் ஸ்ரீபராசர பட்டரின் பகவத்குண தர்பணத்தை அநுசரித்து ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் பெருமையை ஈண்டு அநுபவிப்போம்.

ஆத்மா, பெருமான், பிராட்டி, மோக்ஷம் இப்படிப் பட்ட விஷயங்களை நாம் அறிவதற்கு நமக்குத் தலைசிறந்த பிரமாணமாக இருப்பது வேதமாகும். இந்த வேதம் 14 வித்யாஸ்தானங்களான-வேதங்கள் நான்கு, வேதாங்கங்கள் ஆறு, மீமாம்ஸை ஒன்று, நியாய சாஸ்த்ரம் ஒன்று, தர்மசாஸ்தரம் ஒன்று, புராணம் ஒன்று—ஆகிய இவற்றுள் முதலாவதாக உள்ளது. இதுபற்றியே இதிஹாஸங்களையும், புராணங்களையும் அறிந்தவர்களான மஹரிஷிகள் ஏககண்டமாக,

**"ஸத்யம் ஸத்யம் புநஸ் ஸத்யம் உத்ருத்ய புஜமுச்யதே |**
**வேதசாஸ்த்ராத் பரம் நாஸ்தி நதைவம் கேசவாத்பரம்" |**

ஸத்யம்! ஸத்யம்! மீண்டும் ஸத்யம்! கைதூக்கி உத்கோஷிக்கிறேன். வேதத்திலும் மேலான சாஸ்த்ரம் இல்லை. கேசவனைக் காட்டிலும் மேலான தெய்வமில்லை என்றனர்.

இப்படிப்பட்ட உயர்ந்த பிரமாணமான வேதத்தின் அர்த்தங்களை இதிஹாஸ புராணங்களைக் கொண்டு தான் சரியாக உணரமுடியும். இதிஹாஸ புராணங்களை விலக்கி, வேதார்த்தங்களை அறிய முற்பட்டால் அதனை

உண்மைப் பொருள் விளங்காது என்பது மாத்திரம் அன்று, விபரீதார்த்தங்களும் மனதில் தோன்றும்.

வேதமானது குறைந்த கல்விகேள்விகளையுடையவனைப் பார்த்து இவன் என்னை மோசம் செய்து விடுவானோ என்று பயப்படுவதாகவும் ப்ரமாணம் கூறுகிறது. ஆகவே இதிஹாச புராணங்களைக்கொண்டுதான் வேதார்த்த நிர்ணயம் பண்ணமுடியும். அப்படிப்பட்ட இதிஹாஸ புராணங்களுள் புராணங்களைக் காட்டிலும் இதிஹாஸத்திற்கு ஏற்றம் அதிகம் உண்டு. இவ்விரண்டினுள்ளும் இதிஹாசம் முற்படக் கூறப்பட்டிருப்பதால் தத்வார்த்தங்களை உணர்வதற்கு எப்படி ஸ்ரீராமாயணம் கொள்ளப்படுகிறதோ அப்படியே மஹாபாரதமும் கொள்ளத்தக்கது. ''ஸ்ரீராமாயண வத் மஹாபாரதமபி சரணம்'' என்று பட்டர் அருளியுள்ளார்.

மஹாபாரதத்தில் அநுசாசன பர்வாவில் பீஷ்ம பிதாமஹர் பாண்டவர்களுக்கு உபதேசிக்கும் உயர்ந்த ஸ்தோத்ர நூலாகவும் தத்வார்த்த க்ரந்தங்களை வெளியிடும் நூலாகவும் உள்ளது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம அத்யாயம். மஹாபாரதத்திலும் கூட பகவத் விஷயத்தைத் தவிர பலருடைய பிறப்புகளும் அவர்களின் காமக்ரோதப்பிரயுக்தமான பூசல்களும் கூறப்படுகிற அஸாரமான பாகங்களே அதிகம். இப்படிப்பட்ட அஸாரங்களை நீக்கிப் பார்த்தால் கீதை விதுரநீதி, யக்ஷப்ரச்னம், ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம் போன்ற சில ஸாரமான அம்சங்கள் தேறுகின்றன. அப்படிப்பட்டவற்றுள் தலையாயதாய் உள்ளது ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம். மேலும் இது மஹாபாரதத்தின் ஹ்ருதயம் போன்றுள்ள ஆநுசாசநிக பர்வாவான தர்மம் முதலிய ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் ஸாரமாகக் கூறி முடிக்கும் இடத்தில் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்தே ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாமம் ஸாராம்சங்களின் சுருக்கம் என்பது நன்கு புலப்படும்.

★

மற்றைய ஆசார்யர்கள் அனைவரும் இரண்டாவது பொருள் கூறியிருத்தல் காணலாம்.

அதாவது இராமபிரான் காலத்தில் அயோத்தியில் ஒரு கூனியிருந்தாள்; இவள் கைகேயின் பணிப்பெண்; 'ராம ராம' என்றே நாடெல்லாம் இராமனிடம் அன்புசெய்யுங் காலத்திலே இவள் மாத்திரம் இராமனிடம் வெறுப்புற்றிருந்தாள். இதற்குக் காரணம் யாதாயிருக்கலாம் என்று ஆராய்ந்த வால்மீகி முனிவர் ''ஜ்ஞாதி தாஸீ யதோஜாதா'' என்று கூறிவிட்டார். இதற்கு வியாக்யானஞ் செய்த உடாலி யென்பவர், ''யதோஜாதா—யத: குதச்சித் ஜாதா'' என்று வ்யாக்யானம் செய்திருக்கிறார்; இதனை ''நற்பாலயோத்தியில் வாழும் சராசரம்'' என்றதற்கு வியாக்யானமிடும் பொழுது நம்பிள்ளை காட்டியுள்ளார். "இத்தேசத்தில் பிறந்தாளாகில் பெருமாளுக்கு விரோதஞ் செய்யாள்; ஆகையாலே எங்கேனும் ஓரிடத்தில் பிறந்தாளான ஒரு விழுந்தான்கிடக்கையென்கிறது : ''இந்நிலத்திற் பிறவாமை இவளுக்குக் கொடுமை விளைந்தது என்கிறான்'' என்று தாமும் வியாக்யானஞ் செய்து உடாலியின் வியாக்யானத்தையும் அதற்குச் சான்றாகவும் காட்டியிருக்கிறார் விழுந்தான் கிடக்கை என்பதற்கு அப்ரஸித்தையாய்க்கிடப்பாளொருத்தி என்று பொருள்.

இவள் மயிர் முடியிலே மலர் மாலையை அணிந்து வண்டுகள் அதன் மேலே சஞ்சரிக்கப் போய்க் கொண்டிருந்தாள்; முதுகிலே மலையெழுந்தாற்போன்று கிளர்ந்து திரண்டு வலியதாயிருந்தது இவளுக்குக் கூன்; இதனால் இவளைக் "கொங்கைவன் கூனி'' என்று பெரியாழ்வார் அருளியிருப்பது காணலாம். இவளுடைய மயிர்முடியின் அழகிற்கும் மலர் மாலையின் அணிக்கும் பொருத்தமின்றிக் காணப்பட்டது இவளுடைய கூன்; இதனைக் கண்ணுற்ற இராமபிரான், தன் கையிலுள்ள விளையாட்டு வில்லில் உண்டையை

வைத்துத் தெறித்து இவளுடைய கூனைச் சிதைத்து விட்டான்; இதனைத் திருமழிசைப்பிரானார் ''கொண்டை கொண்ட கோதைமீது தேனுலாவு கூனிகூன், உண்டை கொண்டரங்கவோட்டி உள்மகிழ்ந்த நாதன்'' என்று பாடியிருக்கிறார்; அதுபற்றி, ''கூனே சிதைய உண்டையில் நிறத்தில் தெறித்தாய் கோவிந்தா!'' என்பதற்கு வனவாசத்திற்கு ஆதிகாரணமாயிருந்த கூனியின் கூனை நிமிர்த்த கோவிந்தன் என்று இரண்டாவது பொருள் காட்டியுள்ளார். ''பெருமாளுடைய பால்யத்திலே கண்டு வில்லையிட்டுக் கூனியுடைய கூன்சிதையும்படி மர்மத்திலே தெறித்தபடியைச் சொல்லிற்றாகவுமாம்; கோவிந்தா—பூமிக்கு ரக்ஷகன் என்கை'' என்று அருளியிருப்பதைக் காணலாம். கோ—பூமி அதனை இரட்சியப் பொருளாகக் கொண்டவன் கோவிந்தன் என்று பொருள். இப்பெயர் இராமனுக்கு வழங்கப் படாமையால் ''இச்செயலைக் கிருஷ்ணன் மேலேற்றிக் கூறுகிறார் ஆழ்வார் என்றும் சிலர் சொல்லுவார்'' என்பதாக மற்றொரு பக்ஷம் காட்டியிருக்கிறார். ''நிம்பு சொல்லுவது கிருஷ்ணனுக்கு; ஆகையாலே, பெருமாள் நிம்பை அவன் பக்கலிலே வைத்து 'கோவிந்தா!' என்கிறது என்றுஞ் சொல்லுவர்'' என்று காட்டியுள்ளதைக் காணலாம்.

இப்பக்ஷத்தை நம்பிள்ளை காட்டும் பொழுது ''போம்பழியெல்லாம் அமணன் தலையோடே என்னுமா போலே அவன் தலையிலே யேறிட்டுச் சொல்லுதல்'' என்று அருளியிருக்கிறார். போம்பழியெல்லாம் அமணன் தலையோடே என்னுமா போலே என்பதற்கு அரும்பதவுரைகளில் ஒரு கதையைக் காட்டியிருக்கிறார்கள். அந்தக் கதை இவ்விடத்திற்குப் பொருத்தந்தானா! என்று சிந்திக்க வேண்டியதாயிருக்கிறது. பெரியோர்கள் அருளியிருப்பதால் நாமும் அதனை எண்ணுவது கூடும். மறுப்பதற்கில்லை. ஆனால் அக்கதை ஆசார்யர்கள் அருளியதா? தவறாகப் பின்னால் ஏற்

பட்டதா? என்ற ஐயம் எழுகின்றது. இது சிந்தனைக்குரியதாகும்

"நிம்பு சொல்லுவது கிருஷ்ணனுக்கு" என்று பெரியவாச்சான்பிள்ளையும், "நிம்பு சேருவது கிருஷ்ணனுக்கே" என்று நம்பிள்ளையும் அருளியிருப்பதை நோக்கினால் "பல்லாயிரவர் இவ்வூரில் பிள்ளைகள் தீமைகள் செய்வார் எல்லாம் உன்மேலன்றிப் போகாது" என்று பெரியாழ்வார் யசோதை பாவனையில் அருளிய பாசுரத்தை உட்கொண்டது நம்பிள்ளையின் வாக்யம் என்பது தெளிவாகிறது. இப்பொழுது அமணன் என்பது ஆடையின்றித் திரியும் அவனுடைய பாலப் பருவத்தைக் குறிக்கிறது. அரும்பதாசார்யர் காட்டுகிற அமணசந்நியாசிக்குப் பலபழிகளை ஏறிடுவதற்கு வழியுண்டா? என்று யோசிக்கவேண்டும். ஆதலால் 'கண்ணனுக்கே எல்லாப் பழிகளும் சேருமென்று யசோதைப் பிராட்டி கூறியிருப்பதால்' "போம்பழியெல்லாம் அமணன் தலையோடே யென்னுமா போலே" என்று நம்பிள்ளை அருளியிருக்கிறார் என்பது தெளிவாகிறது. இதனைப் பக்ஷாந்தரமாக இரண்டு ஆசார்யர்களும் கொண்டனராதலால் பூமிக்கு ரக்ஷகன் என்பதே தங்களுக்குப் பக்ஷமாகத் தோற்றுவது காணலாம். 'இராமன் செய்த நிம்பைக் கண்ணன்மேல் ஏறிட்டு அருளிச் செய்கிறார்' என்பதில் இவர்களுக்குத் திருப்தியில்லையென்று தெரிகிறது.

— X —

# சேவகக் கண்ணன்

பாட்டுக்கொருபுலவன் பாரதிக்கு நூற்றாண்டுவிழா கொண்டாடப் பட்டுவருகிறது. நாமும் அவருடைய கவிதையைச் சற்று சுவைப்போம். பாரதியார் கண்ணனைப் பாடியதே ஒரு தனியழகு பழைமைக் கருத்தை மனதில் கொண்டு புதுமைப் பாணியிலே பாடியுள்ளார்.

இராமாயணத்தின் சிறப்பு **''சிறையிருந்தவள் ஏற்றம்''** என்பது ஆசார்யர்களின் திருஉள்ளம். உலக அன்னையான இலட்சுமிப்பிராட்டியார் சீதையாகத் திருவவதரித்து இராவணனுடைய அசோக வனச் சிறைவாசம் இருந்து, தேவர்களுடைய துயரத்தைத் தீர்த்ததுதான் இராமாயணத்தில் உள்ள சிறந்த அம்சம் என்பது பொருள்.

---

**நா. வேணுகோபால நாயக்கர், அட்வகேட்**

---

அதுபோலவே, **தூதுசென்ற எளிமை** மகாபாரதத்தின் பெருமையைக் காட்டுகிறது. அனைத்துலக நாயகனை திருமால் கண்ணனாகத் திருவவதரித்து, பாண்டவர்களுக்காகத் தன் **தன் கழுத்திலே ஓலை கட்டிக் கொண்டு** தூதுவனாக நடந்தானும்; இலட்சம் சுலோகங்களையுடைய மகாபாரதக் காவியத்தில் பக்தர்களுக்குச் சுவையான பாகம் இதுவே!

சமண முனிவரான **இளங்கோவடிகள்** தமது **சிலப்பதிகாரக்** காவியத்தில், இறைவனது இந்த பரம எளிமைக்கு-சேவகத்திற்கு-உருகிக் குரவையர் வாயிலாக,

'மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனுர் வஞ்சம்
கடந்தானை; நூற்றுவர் பால் நால் திசையும் போற்ற,
படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை; ஏத்தாத நா என்ன நாவே!
'நாராயணு என்னுத நா என்ன நாவே!

என்று எதிர் மறையில் வினவுகிருர்!

நாரணனை அர்ச்சுனனுக்காகத் தேர்த்தட்டிலே நின்று, சாரத்தியம் செய்ததை ஒரு பெருமையாகக் கொண்டு **பார்த்த சாரதியாக** நித்திய சேவை சாதிக்கின்றுன் திருவல்லிக்கேணியிலே!

ஆண்டவன் பக்தர்களுக்காகத் தனது மிக உயர்வையும் மதியாமல் அடிமைப்படுவதைப் பல கதைகள் நமக்கு விளக்குகின்றன. இறைவனின் இப்பெருங்குணத்தில் ஈடுபடுகிருர் பாரதியாரும்! தமக்கே உரிய புதிய பாணியிலே இதை வெளியிடுகிருர் **"கண்ணன் என் சேவகன்!"** என்ற மகுடமிட்டு!

கண்ணனை அநுபவிக்கு முன்பு, சேவகனைப் பற்றி நாம் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிருர் பாரதியார் சேவகன் என்றுல் ஏதோ பழங்காலத்துச் சேவகன்—சொன்னபடி நடப்பவன்—அடக்கமே உருவம்—என்றெல்லாம் நாம் நினைத்து விடுவோம்! அதற்காகப் பாரதியார் தற்காலச் சேவகனைச் சரியாக அறிமுகப்படுத்துகிருர்!

**"கூலி மிகக் கேட்பார்!"** அதன்படியே நாமும் அள்ளித் தருகிறோம்! ஆனுல், அவர்கள்,

**"கொடுத்ததெல்லாம் தாம் மறப்பார்!"** வீட்டில் தலை போகிற காரியம்! என்ன செய்வார்கள்! **"வேலைமிக வைத்திருந்தால், வீட்டிலே தங்கிடுவார்!"**

வராததற்குக் காரணம் கேட்டால் விந்தையாக இருக்கும் அவர்கள் பதில்!

**"பானையிலே தேளிருந்து பல்லால் கடித்ததென்பார்!**
**வீட்டிலே பெண்டாட்டி மேல் பூதம் வந்ததென்பார்!**
**பாட்டியார் செத்து விட்ட பன்னிரண்டாம் நாளென்பார்!"**

பேச்சுதான் இப்படி! நடத்தையோ! வயிற்றெரிச்சல் தான்!

**"ஓயாமல் பொய்யுரைப்பார்! ஒன்றுரைக்க வேறு செய்வார்!"**

நமக்கு ஆகாதவர்களிடம் எப்படி எல்லாம் நடந்து கொள்வார்கள்?

**"தாயாதியோடு, தனியிடத்தே பேசிடுவார்!"**

ரகசியமான சேதியா? சரி! சரி!

**"உள்வீட்டுச் சேதி எல்லாம், ஊர் அம்பலத்துரைப்பார்!**

மேலும்; **"என் வீட்டில் இல்லை என்றால்;"** போதுமே! கழுத்தில் டமாரத்தையே மாட்டிக் கொண்டு,

**"எங்கும் முரசறைவார்!"**

பாரதியார்:

'சேவகரால் பட்ட சிரமம் மிக உண்டு!''

என்றாலும் அவருக்குச்

''சேவகர் இல்லாவிடிலோ செய்கை நடக்கவில்லை!

எனவே, ஒரு தகுந்த வேலைக்காரனைத் தேடிக்கொண்டிருந்தார்.

இப்படி ''இடர்மிகுந்து'' வாடுகையில் பாரதியாருடைய அதிர்ஷ்டத்தைப் பாருங்கள்! அவனாகவே எங்கிருந்தோ வந்தான்! வேலையும் கேட்டான்! ''இந்த வேலைக்காரனுக்கு என்ன வெல்லாம் தெரியும்?'' என்று கேட்கின்றீர்கள்! அவனே சொல்வதைக் கேட்கலாமே!

மாடு கன்று மேய்த்திடுவேன்!

மக்களை நான் காத்திடுவேன்!

அதாவது பகுத்தறிவுடையது, இல்லாதது என்ற வித்தியாசமில்லை! அஃறிணை உயர்திணை எல்லாவற்றையும் காக்க முடியுமாம்!

அவன் கால் பட்டால் போதும்! வீடு தூய்மையாகி விடும்; ஒளிவீசும்! அது மட்டுமா!

சின்னஞ்சிறு வேலைகளா? ஊம்!

'வீடு பெருக்கி, விளக்கேற்றி வைத்திடுவேன்!''

''சொன்னபடி கேட்பேன்!''

என்ன வேலையானாலும் கொடுங்கள்!

''துணி மணிகள் காத்திடுவேன்!''

வலையிட்டு உயிரை வாங்கும் பாப்பா இருக்கிறதா?

''சின்னக் குழந்தைக்கு

சிங்காரப் பாட்டிசைத்தே!

ஆட்டங்கள் காட்டி,

அழாதபடி பார்த்திடுவேன்!

எவர் அழுகையும், துக்கமும் போய் விடுமாம் அவனைக் கண்டால்!

வீட்டில்தானு அவன் காப்பான்!

**''காட்டு வழியானாலும் கள்ளர் பயமானாலும்''**

வேலை நேரமும், கட்டுப்பாடும் கிடையாதாம்!

**இரவில், பகலில், எந்நேர மானாலும்**
**சிரமத்தைப் பார்ப்பதில்லை? தேவரீர்தம்முடனே**
**சுற்றுவேன்! தங்களுக்கோர்**
**துன்பமுறாமற் காப்பேன்!**

**''மிக்க உரை பலசொல்லி விருதுபல சாற்றுகின்ற''**

இந்த ஆள் ஆரம்பிக்கிறதே இப்படி இருக்கிறது! கூலிக்காகத்தான் அடிபோடுகிருனே! அந்தச் சந்தேகத்திற்கும் பதில் கிடைக்கிறது!

**ஐயனே! தாலி கட்டும் பெண்டாட்டி**
**சந்ததிகள் ஏதுமில்லை நானோர் தனியாள்!**

கடைசியில் பார்த்தால் அவன்தான் மிச்சம்! ஒண்டிக்கட்டைதான்! எனவே சிலவுகள் கிடையாது!

இவன் வயதையும் பார்க்கலாமே!

**நரை திரை தோன்றுவிடினும்,**
**ஆன வயதிற் களவில்லை!**

சரி, வேலை செய்கிறவனுக்கு ஏதாவது கொடுக்கத்தானே வேணும்! அப்படி ஒன்றும் தேவையில்லை, ஆனுல்;

**''தேவரீர் ஆதரித்தாற் போதும் அடியேனை!**

கூலி என்று கொடுக்கத் தேவையில்லையாம்! பட்சமாக வைத்துக் கொண்டால் போதுமாம்! ஏன் இப்படிச் சொல்லுகிருன்?

**''நெஞ்சிலுள்ள காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை!**

என்ருன்!

அவனிடம் அன்பு செலுத்தி விட்டால் போதும், ஐந்து, ஐம்பது என்று கொடுக்க வேண்டியதில்லையாம்!

(மீதி அடுத்த இதழில்)

(16ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவிமார்களைச் சந்தித்து உங்கள் பசியைக் கூறுங்கள் வழி பிறக்கிறதா, இல்லையா? என்று பார்ப்போம். பெண் களின் உள்ளம் எப்போதுமே விரைவில் பிறருடைய துன்பங்களை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் வாய்ந்தது. 'கண்ணன் அனுப்பினான்' என்ற வார்த்தைகளை அங்கே கூறிப் பாருங்கள். அந்தப் பெயருக்கு எவ்வளவு ஆற்றல் இருக்கிறதென்பது அங்கே விளங்கிவிடும்!' என்று சொல்லி மறுபடியும் அவர்களை அனுப்பி வைத்தான். முனிப் பத்தினிகளுக்கு முன்னால்போய் நின்றார்கள் அந்த இளைஞர் கள். ''மங்கல நல்லறம் வளர்க்கும் மாதர் திலகங்களே! பக்கத்து வனத்தில் கண்ணனும், பலராமனும் தாங்க முடியாத பசியோடு இருக்கின்றனர். அறம் செய்தலை இயற்கைப் பண்பாகக் கொண்ட உங்கள் கைகளால் அவர்கள் பசிக்குச் சோறு கொடுத்தனுப்புவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்'' என வேண்டிக் கொண்டனர் இளைஞர்கள்.

கண்ணன் என்ற பெயரைக் கேட்டவுடனேயே அந்தப் பெண்களின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. இதழ்களில் சிரிப்பு இழையோடி மறைந்தது. உணவுப் பொருள்களை இளைஞர்களிடம் கொடுத்தனுப்புவதற்குப் பதிலாகத் தாங் களே எடுத்துக்கொண்டு உடன் புறப்பட்டு விட்டனர் அந்தப் பெண்கள். அவர்கள் மனதில் மகிழ்ச்சி, களிவெறி யாடிற்று. அறுசுவை உணவுப் பொருள்கள், இனிய கனிகள், நறுமண மலர்மாலைகள், இன்னும் தங்களுக்குத் தோன்றிய பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டு விட்டனர் முனிவர்களின் மனைவியர்கள்.

வரிசை வரிசையாகத் தங்கள் இல்லக்கிழத்தியர்கள் உணவுப் பொருள்களைச் சுமந்துகொண்டு எவர் பின்னாலோ நடந்து செல்வதைக் கண்டதும் முனிவர்கள் திடுக்கிட்டனர், பதறிப்போய் ஓடோடி வந்து தங்கள் மனைவிமார்களை வழி மறித்துத் தடுத்தனர். ''பெண்களே! இதென்ன அநியாயம்? இல்லறப் பண்பிற்கு மாறாக இப்படிக் கணவன்மார்களிடம் சொல்லிக் கொள்ளவும் செய்யாமல் எங்கோ புறப்படுகிறீர்களே? இப்படிச் செய்யலாமா? பேசாமல் திரும்பிச் செல்லுங்கள்'' என்று அறிவுரை பகர்ந்தனர்.

''நாங்கள் திரும்பிச் செல்வதென்பது இயலாத காரியம். கண்ணனும், பலராமனும் பசித்திருக்கும் செய்தியைக் கேள்விப்பட்ட பின்பும் அதை எங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. கண்ணன் தெய்வப் பிறவி. அவனைச் சூழ்ந்துள்ளவர்களும் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள். அவர்களுக்கு உதவுவதே பெரிய அறமாகும்'' என்று கணவன்மார்களை எதிர்த்து மறுமொழி பகர்ந்தனர் அந்தப் பெண்கள். அதன்பின் முனிவர்கள் அவர்களைத் தடுக்கும் ஆற்றலை இழந்தனர்.

மானின் நடையும், பெண் யானையின் மதர்ப்பும் கொண்ட மயில்கள் அணிவகுத்துச் செல்வதுபோல் யமுனைக் கரையில் கண்ணன் இருந்த இடத்தை நோக்கிச் சென்றனர் பெண்கள். பசுக்கூட்டங்களும் கோகுலத்து இளைஞர்களும் சூழ்ந்திருக்க அருகில் பலராமனோடு அசோகமரம் ஒன்றின் நிழலில் கண்ணன் வீற்றிருந்தான். அடுக்கடுக்காக உணவுப் பொருள்களை ஏந்தி வரும் முனிபத்தினிகளின் கூட்டத்தைப் பலராமனுக்குச் சுட்டிக் காட்டிக் குறும்புச் சிரிப்புச் சிரித்தான் கண்ணன். அந்தச் சிரிப்பில் வெற்றிப் பெருமிதம் வெளிப்படையாகத் தெரிந்தது. மென்மையும்,

மேன்மையும் நிறைந்த பெண் உள்ளங்களை வெற்றி கொண்டவனுக்கு மட்டுமே கிடைக்கும் பெருமிதம் ஆகும் அது. உணவுப் பொருள்களைக் கண்ணனுக்கு முன்னால் வரிசையாகப் பரப்பி விட்டு நாணத்தோடு தலை குனிந்து அசோக மரத்தடியில் நின்றனர் அவர்கள். சற்றே பெண்மை கலந்த சாயலில் சிரித்த முகத்தோடு கண்ணனைக் காணும் போது தெய்வத்தையே கண்டார்கள் அவர்கள். அந்தச் சிரிப்பில் தெய்வீகம் சிரித்தது! பேச்சில் தெய்வீகம் பேசிற்று.

''பெண்ணரசிகளே! உங்கள் உள்ளங்களின் வளங்களைப் போற்றுகிறேன். பசித்த வயிற்றுக்குச் சோறிடா விட்டாலும் பரவாயில்லை. வேள்வி நடத்தினால் அன்பு மயமான இறைவனை அடைந்து விடலாம் என்றெண்ணும் உங்கள் நாயகர்களைக் காட்டிலும் எவ்வளவோ மேலான வர்கள் நீங்கள். நானும் நன்மைகள் பொலிய இனிதென உள்ள இல்லறப் பண்புகளெல்லாம் உங்கட்கு எய்த வேண்டுமென வாழ்த்துகிறேன். பசித்தவனுடைய வயிற்றில் தெய்வத்தைத் தேடும் உங்கள் பண்பு என்னால் வாழ்த்தப் பெறுகிறது. முனிவர்களின் தடையை மீறி என்னைக் காண வேண்டுமென்ற ஆசையால் இங்கு வந்திருக் கிறீர்கள். உற்றமும் சுற்றமும் பெருக உங்கள் கணவர்கள் நடத்தும் வேள்விகளை உடனிருந்து நிறைவேற்றி உயர்வு அடையுங்கள்'' என்று அவர்களை வாழ்த்தினான் கண்ணன்.

அவனுடைய பேச்சு அந்தப் பெண்களின் உள்ளங்களில் தேன்மழை பொழிந்தது போலிருந்தது. அங்கிருந்து அவனை விட்டுச் செல்வதற்கு மனமில்லாமல் தயங்கித் தயங்கி நின்றார்கள் அவர்கள். ஆயுட்காலம் முழுவதும் அப்படியே அந்தத் தெய்வச்சிரிப்பின் காலடியில் நின்றுகொண்டே இருக்க வேண்டும்போல மனத்தில் ஒரு துறுதுறுப்பு. எல்லாப் பெண்களும் அந்தத் துறுதுறுப்பை அடக்கிக் கொண்டு பேசாமல் இருந்தார்கள். ஒரே ஓர் உணர்ச்சி

மயமான பெண்ணால் மட்டும் இப்படி அடக்கிக் கொண்டு இருக்க முடியவில்லை. "கண்ணா! எங்கள் நெஞ்சங்களை எல்லாம் உன்னிடம் பறிகொடுத்து விட்டோம். நீயோ எங்களைத் திரும்பிப் போகச் சொல்கிறாயே?"

"பெண்களே! நீ என்னிடம் உள்ளத்தை இழந்துவிட்டவளாக, உன்னை எப்போது எனக்குரியவளாய் எண்ணு கிறாயோ, அந்த விநாடியே நான் உன்னுடையவனாகி விடுகிறேன்" என்று அவளுக்கு மறுமொழி கூறினான் கண்ணன். அந்தப் பெண்கள் யாவரும் அவனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு சென்றனர்.

வேள்வியில் ஈடுபட்டிருந்த முனிவர்கள் தத்தம் மனைவியரை எண்ணி, அவர்களைக் கண்ணன் கவர்ந்த விதமறியாது மயங்கினர். உலகத்தில் அன்புக்காக வகுக்கப்பட்ட முறைகளால் இறைவனை அடைய முயல்வதைக் காட்டிலும் அன்பாலேயே எளிதில் அடைய முடியும்போலும். அன்பு தான் உயர்ந்தது. முறைகள் வெறும் கருவிகள்தான். என்பதை அந்த முனிவர்கள் இப்போது உணரத் தலைப் பட்டனர். வயிற்றுப் பசிக்குச் சோறும், மனப்பசிக்கு அன்பும் அளித்துத் தங்கள் மனைவியர்கள் கண்ணனை அணுகி விட்டனர். மாபெரும் வேள்விகள் செய்தும் தாங்கள் நெருங்க முடியவில்லையே! என்று ஏங்கி நின்றன அவர்களுடைய உள்ளங்கள். அறிவின் மிடுக்கும் மனத்தின் இறுமாப்பும் உலகில் எதையும் அடையத் துணை செய்வதில்லை. எதையும் இழக்கத் தயாராயிருக்கும் உள்ளம் அன்பிற்கு வேண்டும். உள்ளத்தின் மதிப்புக்குத்தான் அன்புலகிலே பெருமை உண்டு. உடலின் தொல்லைகள் அதற்கு ஏலாதவை. முனிவர்களின் மனைவியர்க்கு எதையும் இழக்கும் அன்பின் நிறைவு இருந்தது. அதனால் தான் அவர்கள் கண்ணனை நெருங்க முடிந்தது. அறிவினால் மட்டும் வாழ முயன்ற முனிவர்களுக்கு அவனை அடைய முடியவில்லை!

(தொடரும்)

# ஸ்ரீபாஷ்ய ஸாரம்

**(முன்னுரை)** வேதம் கர்ம காண்டமென்றும் ப்ரஹ்ம காண்ட மென்றும் இரு வகுப்பாகவுள்ளது. பூர்வபாகம் கர்மகாண்டமென்றும், உத்தரபாகம் ப்ரஹ்மகாண்ட மென்றும் வழங்கப்படும். உபநிஷத்துக்களையே ப்ரஹ்ம காண்டமென்பது. பகவானுக்கு ஆராதந ரூபங்களான யஜ்ஞம் முதலிய கர்ம விசேஷங்களை விரிவாகக் கூறும் வேத பாகம் கர்மகாண்டமென்றும், அந்த கருமங்களினால் ஆராதிக்கப்படுகின்ற பகவானுடைய ஸ்வரூப ரூபகுணங்களை விரிவாகக் கூறும் வேதபாகம் ப்ரஹ்மகாண்டம் (அதாவது உபநிஷத்து) என்றும் சொல்லிற்றாயிற்று.

### ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் பிரதிவாதி பயங்கரம்

## அண்ணங்கராசாரியர்ஸ்வாமி

கர்மகாண்டத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக ஜைமிநியென்னும் மஹர்ஷி யெழுந்து பதினாறு அத்யாயங்களோடு கூடிய ஒரு சாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்குப் பூர்வமீமாம்ஸை யென்று பெயர். இதில் பன்னிரண்டு அத்யாயங்களே ஜைமிநி மஹர்ஷியால் இயற்றப்பட்டவையென்றும், மேல் நான்கு அத்யாயங்கள் காசக்ருத்ஸ்ந ரென்பவரால் இயற்றப்பட்டவையென்றும் ஒரு பக்ஷமுண்டு. இதைப்பற்றி இங்கு விசாரம் அப்ரஸக்தம். **"ஜைமிநீயம் ஷோடச லக்ஷணம்"** என்பது பொதுவான வார்த்தை. வ்ருத்தி க்ரந்தத்தில் பதினாறு அத்யாயங்களும் ஜைமிநி ப்ரோக்தமென்று கூறப்பட்டுள்ளது. (லக்ஷணமென்று அத்யாயத்துக்குப் பெயர்.)

ப்ரஹ்ம காண்டமென்னும் உபநிஷத்பாகத்தில் தோன்றும் சங்கைகளைப் பரிஹரிப்பதற்காக வ்யாஸரென்னும் மஹர்ஷியெழுந்து நான்கு அத்தியாயங்கள் கொண்டவொரு சாஸ்த்ரத்தை இயற்றினார். அதற்கே **சாரீரக மீமாம்ஸை யென்று** பெயர். உத்தர மீமாம்ஸை யென்றும் வழங்குவர். ப்ரஹ்ம ஸூத்ரம் என்பது இதனையே. ஒவ்வொரு அத்யாயத்திலும் நான்கு பாதங்களுள்ளன. ஆகவே நான்கு அத்யாயங்களையும் பதினாறு பாதங்களையுங் கொண்டது சாரீரகமீமாம்ஸை யென்றதாயிற்று.

இதில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றி சர்ச்சை செய்து நிர்ணயிக்கும் பகுதிக்கு அதிகரணமென்று பெயரிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட அதிகரணங்கள் இந்த மீமாம்ஸையில் நூற்றைம்பத்தாறு உள்ளன. சில அதிகரணங்களில் ஒரே ஸூத்ரமிருக்கும். பல அதிகரணங்களில் பல ஸூத்ரங்களிருக்கும். மொத்தம் ஸூத்ரங்களின் லக்கம் ஐந்நூற்று நாற்பத்தைந்து என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆக, நான்கு அத்யாயங்களையும் பதினாறு பாதங்களையுங் கொண்டது ப்ரஹ்ம ஸூத்ர சாஸ்த்ரம் (அல்லது) சாரீரகமீமாம்ஸா சாஸ்த்ரமென்றதாயிற்று.

தத்வ ஹித புருஷார்த்தங்களை நாம் தெரிந்து கொள்வதற்கு உபநிஷத்துக்களே ஸாதனமாகும். அவ்வுபநிஷத்துக்களின் பொருள்களை ஸம்சய விபர்யயமற நிஷ்கரித்து விளக்கக்கூடியது இந்த ப்ரஹ்மஸூத்ர சாஸ்த்ரமேயாதலால் வேதாந்திகளுக்கு இதுவே புகலாயிற்று. ப்ரஹ்மஸூத்ர மென்கிற சாரீரக மீமாம்ஸையின் பொருளை நிஷ்கர்ஷமாகவும் நிஷ்கல்மஷமாகவும் தெரிந்து கொண்டவர்களே வேதாந்திகளென்றும் ப்ரஹ்ம ஜ்ஞானிகளென்றும் சொல்லத் தகுதியுடையார்.

மஹர்ஷி ப்ரணீதங்களான ஸூத்ரங்களின் பொருளை நம்போல்வார் சிறிதும் அறியகில்லார்களாதலால், நம் போன்ற அல்ப மதிகளிடத்தில் பரம கருணைகொண்ட பூருவர்கள் அந்த ஸூத்ரங்களின் அர்த்தத்தை விளக்கி பாஷ்யங்கள் இயற்றியுள்ளார்கள். த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம் என மூன்று மதங்கள் உலக ப்ரஸித்தமாக வழங்குபவை. இம்மூன்று மதங்களிலும் பாஷ்யங்கள் அவதரித்துள்ளன. அத்வைத மதத்திற்காக சங்கராசார்யர் பாஷ்யம் இயற்றினர். த்வைத மதத்திற்காக ஆனந்த தீர்த்தர் (மத்வாசார்யர்) பாஷ்யமியற்றினர். நமது விசிஷ்டாத்வைத மதத்திற்காக பகவத் ராமாநுஜாசார்யரென்கிற ஸ்வாமியெம்பெருமானர் ஸ்ரீபாஷ்யமருளிச் செய்தார். வட இந்தியாவில் அதிக ப்ரஸித்திபெற்றுள்ள வல்லபமதம் நிம்பார்க்கமதம் முதலிய மதங்களுக்காகவும் பாஷ்யங்கள் தோன்றியுள்ளன சைவ மதத்திற்காக நீலகண்ட பாஷ்யம் தோன்றியுள்ளது. இப்படி மற்றும் பல பாஷ்யங்களிருந்தாலும் மதத்ரயபாஷ்யமென்று மூன்று பாஷ்யங்களே நமது நாட்டில் குலாவப்பட்டுலாவுவன.

விசிஷ்டாத்வைதிகளென்றும் ஸ்ரீவைஷ்ணவர்களென்றும் பகவத் ராமாநுஜதர்சநஸ்தர்களென்றும் வழங்கப்படுகின்ற நமக்கு ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்யமே ஜீவாதுவென்பது சொல்லாமலே விளங்கும். உபநிஷத்துக்களின் உண்மைப் பொருளை விளக்கி ஸூத்ரகாரருடைய உள்ளத்திற்கு அநுகுணமாக நிஷ்பக்ஷபாதமாய் நிரூபிக்கப்பட்டது ஸ்ரீராமாநுஜ பாஷ்யமே யென்று மேனாட்டுப் புலவர்களும் மெச்சியுள்ளார்கள். அந்த ஸ்ரீபாஷ்யத்தின் உண்மைப் பொருளானது ச்ருதப்ரகாசிகை முதலிய வியாக்கியான நூல்களின் உதவியினால் உணரப்படவேண்டும். அதற்கு ஸாமான்ய சாஸ்த்ரங்களின் உதவி இன்றியமையாதது. அப்படிப் பட்ட சாஸ்த்ரஜ்ஞர்கள் நெடுநாள் குருகுலவாஸம் செய்து

ஸ்ரீபாஷ்யத்தையதிகரித்து பாஷ்யாதிகாரிகளென்று பேர் பெற்றுச் சிறந்த வேதாந்திகளாகித் தத்வ ஹித புருஷார்த்தங்களைத் தெளிவாக உணர்ந்து நிரதிசயானந்தசாலிகளாகின்றனர். அவ்வளவு அதிகாரம் வாய்க்கப்பெறாதவர்களையும் கைவிடமாட்டாத கருணைமிக்க நம் பூருவாசாரியர்கள் திவ்யப்ரபந்த தத் வ்யாக்யானங்களையும் ரஹஸ்ய தத் வ்யாக்யானங்களையும் மற்றும் பல திவ்ய க்ரந்தங்களையுமருளிச் செய்துள்ளார்களாதலால் ஸ்ரீபாஷ்யத்தில் நேராக அவகாஹிக்க மாட்டாதவர்களும் இழவாமல் அதில் விவரிக்கப்பட்டுள்ள தத்வ ஹித புருஷார்த்தங்களை ஸதாசார்ய ஸகாசத்தில் உணரப்பெறுகின்றார்கள். அன்னவர்களது ஞானத்திலும் ஒரு குறையில்லை. குறையில்லையென்பது மாத்திரமேயல்லாமல் ஸ்ரீபாஷ்யாதிகாரிகளைக் காட்டிலும் மிக விசதமான ஞானத்தெளிவு பெற்றவர்களாகவும் விளங்குகின்றார்கள். ஆனாலும் ப்ரஹ்மஸூத்ரத்தில் என்ன விஷயம் எந்த விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது? என்று தெரிந்து கொள்ளப் பலர்க்கு அபிலாஷையுண்டு. விஸ்தாரமாகத் தெரிந்து கொள்ளாவிடினும் ஸாரஸங்க்ரஹமாகவாவது தெரிந்துகொள்ள வேணுமென்கிற விருப்பமுடையார்க்கு, ஸாரமாக முக்கியமான பல அதிகரணங்களை யெடுத்துக் கொண்டு இஃது எழுதப்படுகின்றது. ஸ்வாமி ஸ்ரீபாஷ்யம் வேதாந்ததீபம் வேதாந்தஸாரம் என்கிற மூன்று திவ்ய க்ரந்தங்களினால் ப்ரஹ்ம ஸூத்ரப் பொருள்களை விரிவாகவும் சுருக்கமாகவும் வெளியிட்டருளினர். அவற்றைத் தழுவி இஃது எழுதப்படுகின்றது. குற்றங்களைந்து நற்றங்கொள்வர் பெரியார்.

(தொடரும்)

# ஸ்ரீவைஷ்ணவம்

Dr.V.V. ராமாநுஜம்

ஸம்ஸாரிகளான சேதனர்களுக்குப் 'பிறவித்துயர்' எனப்படும் ஸம்ஸாரத்திலிருந்தும் விடுதலை பெற ஜகத் காரணனான பரம புருஷனை உபாஸித்து அவனை அடைய வேண்டும் என்று வேதம் முதலான சாஸ்த்ரங்கள் காட்டித் தந்துள்ளன ப்ரஹ்ம சப்தத்தினால் (நான்முகனை இங்கு சொல்லவில்லை. மிகவும் பெரியவன் என்பதையே இந்த ப்ரஹ்ம சப்தம் குறிக்கும்) சொல்லப்படும் காரண வஸ்து வான பரம்பொருள் (ஆதி பகவான்) ஸ்ரீமந்நாராயணனே என்பதை **ஸ்ரீவைஷ்ணவம்** என்ற இக்கட்டுரைத் தொடரில் பல ப்ரமாணங்களைக் காட்டி ஸ்தாபித்தோம். அஸாதாரண மான திவ்யமங்கள விக்ரஹம் (திருமேனி), எல்லையற்ற ஞானம், சக்தி, தேஜஸ் முதலான கல்யாண குணங்கள் படைத்தவன் இவ்வெம்பெருமான். ஸகல ஜகத்தையும் அதிலுள்ள எல்லா சேதன அசேதன வஸ்துக்களையும் உண்டாக்கி, காத்து, அழித்து லீலை புரியுமவன் இப்பரம புருஷன். விஷ்ணு என்றும் வாஸுதேவன் என்றும் அழைக் கப்படும் இப்பரம புருஷன் ஸர்வேச்வரனுவான். எல்லா உலகங்களையும் நியமித்து ஆள்பவன். ஸமஸ்த சேதநாசேத னங்களும் இவனுக்குச் சரீரங்களாய் ஆளும் உடமைகளா யுள்ளன நமது நற்பேற்றுக்கு இவனையே ஆறுகவும் (உபாய மாகவும்) பேறுகவும் (உபேயமாகவும்) பற்றவேண்டும். பிறவி என்னும் பெரும்பிணியிலிருந்தும் நம்மை விடுவிக்க வேறு எந்த தெய்வத்தினாலும் ஆகாது. முமுக்ஷுவான சேதனனுக்கு நாராயணனைத் தவிர்த்து இதர தெய்வங் களைப் பற்றுதல் தகாதாகையால் அப்படிப் பற்றுதல்

கூடவே கூடாது. அப்படிப் பற்றுதல் கொடிய பாபமும் ஆகும்.

மேலே சுருக்கமாகச் சொல்லியவை ஸ்ரீ வைஷ்ணவம் என்று அழைக்கப்படும் மதத்தின் சில முக்கியமான கொள்கைகள் ஆகும். ஸகல வேதங்களும், வேதங்களை விளக்க வந்த இதர ப்ரமாணங்களும் இக்கொள்கைகளையே ஆதரிக்கின்றன—என்பதை முன் கட்டுரைகளில் விவரமாக மூதலித்தாயிற்று. இக்கொள்கைகளில் திடமான ஆழ்ந்த நம்பிக்கை உள்ளவனே ஸ்ரீவைஷ்ணவன் என்று அழைக்கத் தகுந்தவன். ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவனும் (ஏன், எல்லா மனிதர்களுமே) விளக்கமாக அறியவேண்டும் விஷயங்கள் ஐந்து. இவை யாவன—மிக்க இறைநிலை (பகவானைப் பற்றிய அறிவு) மெய்யாமுயிர் நிலை (நம்மையே பற்றி நாமறிய வேண்டுவது), தக்கநெறி (பகவானை நாமடையும் வழி), தடையாய்த் தொக்கியலும் ஊழ்வினை (அப்படி அடையவொட்டாமல் தடுக்கும் பாபமான (விரோதி), வாழ்வு (பகவானை அடைந்து பெறும் பேறு) என்ற ஐந்துமாகும். இந்த ஐந்து விஷயங்களிலும் தெளிவான அறிவு மிகவும் அவசியம். இவற்றை மேல் வரும் கட்டுரைகளில் விளக்குவோம்.

அதற்கு முன்பு ஸ்ரீவைஷ்ணவர்கள் அவசியம் அறிந்து அதன்படி நிலைப்பதற்காக ஸ்ரீ வைஷ்ணவனின் பாஹ்ய லக்ஷணங்களையும் (வெளி அடையாளங்கள்), அந்தரங்கமான நிலையையும் சிறிது விவரிப்போம். பாஹ்ய லக்ஷணங்களை வரிசைப்படுத்தி அறிவிக்கும் ஒரு ச்லோகம்:

**யேகண்டலக்ந துலஸீநளிநாக்ஷ மாலா:**
**யேபாஹுமூலே பரிசிஹ்நித சங்கசக்ரா: |**
**யேலலாட பலகேலஸதூர்த்வ புண்ட்ரா:**
**தேவைஷ்ணவா : ஸத்யபாசுபவித்ரயந்தி ||**

"பைங்கமலத்தண்தெரியல் பட்டர்பிரான் என்று திருப்பாவையில் பெரியாழ்வார் வருணிக்கப்படுகிறார். தாமரை

மணிமாலை, துலஸிமணிமாலை இவற்றைக் கழுத்திலணிவது ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம். பெருமாள் சாத்திக்களைந்த "பவித்ரம்" என்னப்படும் பட்டுநூல் மாலைகளையும் அணிவர் வைணவப் பெரியோர்கள். கைகளின் மேல் பாகங்களில் பொறிக்கப்பட்ட எம்பெருமானின் திருவாழி திருச்சங்கங்களின் அடையாளம் இன்னொரு லக்ஷணமாகும். இதையே திருவிலச்சினை என்பது. நெற்றியிலும் (உடலில் உசித ஸ்தானங்களிலும்) நடுவில் ஸ்ரீசூர்ணரேகையுடன் கூடிய ஊர்த்வபுண்ட்ரங்களை (திருமண்காப்பை) அணிவது மிக முக்கியமான லக்ஷணம்.

இவற்றுள் திருவிலச்சினை ஆசார்யனிடம் பெறவேண்டும் "தீயில் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின் கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றோம்" (திருப்பல்லாண்டு-7) என்கிறபடியே வைதிகாக்னியில் காய்ச்சப்பெற்ற சக்கரத்தாழ்வார், பாஞ்சஜன்ய ஆழ்வார் (சங்கம்) அடையாளங்களால் ஆசாரியன் திருக்கையால் தோளுக்குக்கீழே கையின் மேல்பாகங்கள் ஒற்றப்பெறுவதே திருவிலச்சினை பெறுவதாகும். இப்படிச் "சூட்டப் பெறுவதால்" நாம் எம்பெருமானின் அடிமைகள் என்று வெளியுலகுக்கு அடையாளமிட்டவர்கள் ஆகின்றோம். இதனால் எம்பெருமானுக்கு ஆட்செய்ய ஒரு தகுதி ஏற்படுகிறது. இந்த ஸம்ஸ்காரத்தினால் (இதைத் தாப ஸம்ஸ்காரம் என்பர்) இடப்பட்ட அடையாளங்கள் பலருக்கு நாளடைவில் மறைந்து விடக்காண்கிறோம். பலருக்குத் "திருபணித்தாழ்வடங்கள்" எனப்படும் (முன்விவரித்த) மாலைகளையும் அணிய வாய்ப்பதில்லை. பெருமாளுக்குத் திருவாராதனம் பண்ணும் போதாவது அணிவது நலமாகும்.

திருமண்காப்பே ஒருவன் வைஷ்ணவன் என்று எளிதில் அறியும்படியான வெளி அடையாளமாக உள்ளது. பௌஷ்யிலிருந்தே இது நமக்குப் பவித்ரங்களில் காப்பாக (ரக்ஷையாக) அமைந்துள்ளது விளங்கும். புண்ட்ரம் என்று மேல்

நோக்கிச் செல்லும் ரேகைகளைச் (கோடுகளை) சொன்னப்படி. நம்மை மேலான உலகங்களுக்கு நடத்தக் கூடியவை. திருமண் என்பது "ச்வேதம்ருத்திகா" எனப்படும் வெண்மையான களிமண்ணை. இடைவெளியுடன் ஹரிபாதாகாரமாக ஊர்த்வபுண்ட்ரத்தை இம்மண்ணினால் அணியவேண்டும் என்பதற்கு பல ப்ரமாணங்கள் உண்டு.

ஹரிபாதாகாரம் (எம்பெருமான் திருவடிகளின் வடிவம் போன்றது). நாஸிகாமூலத்தில் கமலபீடம் அமைக்க வேண்டும். (நாஸிகா மூலம்—மூக்கின் அடிபாகம்). இடைவெளியின் மத்தியில் சிவப்பு நிறமுடைய ஸ்ரீசூர்ணம் அணிய வேண்டும். ஸ்ரீ என்பதால் ஸகலமங்களங்களும் உண்டாகும் என்பது சொல்லாமலேயே விளங்கும். திருமண் ஸ்ரீசூர்ணம் இவை சேர்ந்த மூன்று ரேகை (கோடு)களை திருமண்காப்பு என்றும் ஊர்த்வபுண்ட்ரம் என்றும் அழைக்கிறோம்.

ஸ்ரீ பாஞ்சராத்ரம் முதலான சாஸ்த்ரங்களில் ஊர்த்வபுண்ட்ரத்தை நமது உடலில் 12 இடங்களில் எம்பெருமானின் முக்யமான பன்னிரு திருநாமங்களைச் சொல்லி அணிய வேண்டுமென விதிக்கப் பட்டுள்ளது. அப்படியே பிராட்டியின் திருமங்களைச் சொல்லி ஸ்ரீசூர்ணம் அணியவேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே நெற்றியில் திருமண் காப்பணிவித்து பெரியோர்கள் ரக்ஷையைச் செய்வித்தாலும், முதன் முதலில் ஆசார்யன் இதற்கான மந்த்ரங்களை உபதேசித்து நமது உடலில் தன் திருக்கையால் அணிவிப்பது ஒரு ஸம்ஸ்காரமாக (புண்ட்ர ஸம்ஸ்காரம் என்பர் இதை) அமைந்துள்ளது. எம்பெருமானின், பிராட்டியின், திருநாமங்களைச் சொல்லி அணிவதால் ஊர்த்வ புண்ட்ரம் "நாமம்" என்ற சொல்லாலும் அழைக்கப் படுகிறது. "கேசவன் தமர்" என்ற திருவாய்மொழியில் (2-7) இந்தப் பன்னிரு திருநாமங்களும் நமக்கு உபதேசமாகக் கிடைக்கின்றன. இதன் ஈட்டின் ப்ரவேசத்தில் (முன்னுரையில்) "ஆழ்வார் ஸ்ரீவைஷ்ணவன் ஆனேன் என்கிறார்.

வைஷ்ணவத்வ சின்னமிதே திருத்வாதச நாமம்" என்று எம்பார் திருவாக்காகக் காண்கிறது. ஒவ்வொரு திருமண் காப்பும் எம்பெருமானின் ஒவ்வொரு ஆகாரத்தைக் குறிக்கிறது. அவனே நம் உடலிலிருந்து நம்மை ரக்ஷிக்கிறான்.

பன்னிரு திருநாமங்களையும் (த்வாதச ஊர்த்வ புண்ட்ரம்) தினமும் அணியவேண்டும். இதுவே பெரியோர்களின் ஆசாரமுங்கூட. ஆனால் பல காரணங்களால் ஸ்ரீவைஷ்ணவர்கள் இதை நடைமுறையில் கடைப்பிடிப்பதில்லை. பெருமாளுக்கு விசேஷ திருவாராதனம் ஸமர்ப்பிக்கும் ஏகாதசி, அமாவாஸை, பெருமாள், ஆழ்வார்கள் ஆசார்யர்கள் இவர்களுடைய திருநக்ஷத்ர தினங்களிலாவது இப்படித் திருமண் காப்புகளை அணிவது நன்மை பயக்கும். தினமும் நெற்றியில் மட்டுமாவது (கழுத்தின் பின்புறமான பிடரியிலும் கூட) பளிச்சென்று திருமண் அணிய வேண்டுவது மிகவும் அவசியம் இக்காலத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்களிடையே இப்பழக்கம் மிகவும் குறைந்து விட்டது. இது மிகவும் வருந்தத் தக்க விஷயமாகும். திருமண் காப்பணிவதால் ஆத்மக்ஷேமம் மட்டுமல்ல சரீர க்ஷேமமும் ஏற்படுகிறது. இது விஞ்ஞான ரீதியான உண்மை. நெற்றியிலுள்ள திருமண் காப்பைப் பார்த்தே ஒருவன் ஸ்ரீவைஷ்ணவன் என்று அறியமுடியும்.

போலீஸ் அதிகாரிகள், சைன்ய அதிகாரிகள், வக்கீல்கள் நீதிபதிகள் இவர்களை அவர்களுடைய உடையிலிருந்து அடையாளம் கண்டு கொள்ளலாம். அந்தந்த அதிகார பூர்வமான உடையில் (official dress) இல்லாதபோது அவர்களை அடையாளம் கண்டு கொள்ள இயலாது. கண்டு கொள்ளாத வரையில் அவர்களுக்குரிய மரியாதையும் மதிப்பும் பொதுமக்களிடையே கிடைக்காதல்லவா? அப்படியே தான் திருமண் காப்பு விஷயத்திலும். இதுபற்றி அடுத்த இதழில் இன்னும் விளக்குவோம். (தொடரும்)

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

T S. ஸ்ரீநிவாஸன்

(1649)

விசாகப்பட்டினம்-2

28 நவம்பர் 1981.

# அன்புள்ள கீதாசாரியரே!

'இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன்
கெடுப் பாரிலானும் கெடும்'

என்பது போல அக்னிஹோத்ரம் தாதாசார்யர் செய்யும் தவறுகளை, இடித்துரைத்து உண்மை தன்னை, எடுத்தோதும் தங்களையும், ஸ்ரீதிருமலாசாரியர் ஸ்வாமிகளையும், பொதுவாக தமிழன்பர்களும், குறிப்பாக வைணவர்களும் சிரந்தாழ்ந்து நன்றி கூறுவர். வளர்க நும் பணி! கார்த்திகையில் கார்த்திகை நாள் வந்துதித்த கலியப் பெருமாளின் திருவுருவம் கார்த்திகை இதழை அலங்கரித்தது மிகவும் சரியாக இருந்தது.

அன்பன்,

தி. சே. ஸ்ரீநிவாஸன்